"ஆம். ஐந்து இந்திரியங்களும் பொருந்துவது காமத்தின் விளையாட்டில் அல்லது கடவுளின் ஈடுபாட்டில்" என்றாள் ஹேமா.

"உண்மை" என்றான் தனுர்தாஸன்.

"அதனால்தான் சிற்றின்பத்தைக் காட்டிப் பேரின்பத்தைக் காட்டுகிறார்கள் பெரியவர்கள்" என்றாள் ஹேமா.

தனுர்தாஸன் அவளைத் திரும்பி நோக்கினான். "நீ தத்துவம் பேசுகிறாய்" என்று கூறினான்.

"கலையும் ஒருவிதத் தத்துவம்" என்றாள் ஹேமா.

"எனக்கு இரண்டு கலைகள் தெரியும். இன்னொன்று மல்யுத்தம். அதில் என்ன தத்துவத்தைக் காண்பாய்?" என்று வினவினான் தனுர்தாஸன்.

"அந்தக் கலையை நான் கண்டதில்லை" என்ற ஹேமா நகைத்தாள்.

"நாளை காணலாம்" என்ற குரல் அவர்களைப் பிரிய வைத்தது. திரும்பிய இருவரும் அரசர் தங்களுக்குச் சற்று எட்ட நிற்பதை உணர்ந்தார்கள்.

மன்னர் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் காட்டவில்லை. "வில்லி! நாளை நீ விஜயபுரி மல்லனைச் சந்திக்கிறாய்?" என்று கூறினார்.

அதைக் கேட்ட ஹேமாவின் முகத்தில் அச்சம் துளிர்த்தது. "விஜயபுரி மல்லனா?" என்று வினவிய அவள் குரலிலும் அச்சம் விரவிக் கிடந்தது.

"ஆம்" என்றார் அரசர்.

"அவன் ஏற்கனவே பலரைக் கொன்றிருப்பதாகக் கேள்வி" என்று ஹேமா கூறினாள்.

"ஆம்" என்ற அரசர், "ஹேமா! நாளைக்கு இந்த மற்போரைக் கவனிக்கக் கூட்டம் தாங்காது. உனக்கு மட்டும் தனி இடம் வைத்திருக்கிறேன். என் மகளுக்குப் பக்கத்தில் நீ உட்காரலாம்" என்று கூறிவிட்டு வாயிற்படியை நோக்கி நடந்தார்.

அவர் சென்றதும் ஹேமாவின் உடல் நடுங்கியது. "பெரும் அபாயம்" என்றாள் ஹேமா நடுங்கும் குரலில்.

வில்லிதாஸன் உதடுகளில் புன்முறுவல் அரும்பியது. "ஹேமா! அபாயத்தைச் சந்திக்கத்தான் அரசர் என்னை நியமித்திருக்கிறார். அதற்குத்தான் ஆயிரம் பொற் கழஞ்சுகள் ஊதியம் கொடுக்கிறார். தவிர கடமையும் இருக்கிறது" என்று கூறினான் அபாயத்தை சிறிதும் லட்சியம் செய்யாத குரலில். ஹேமா பதிலேதும் சொல்லவில்லை. அச்சத்தால் அவனை நெருங்கி இணைந்தாள். வில்லியின் வலிய கைகள் அவளை வளைத்தன கடுமையாக. கடுமையிலும் இன்பமிருந்தது ஹேமாவுக்கு.

8. மற்போர் அரங்கம்

வில்லிதாஸனின் கைகள் வலிய அணைத்த தால் அவள் பூவுடலெங்கும் இன்ப உணர்ச்சிகள் ஊடுருவிச் சென்றன. அவன் கைகள் அளித்த கடுமை தேவையாயிருந்தது அவள் பருவ உடலுக்கு, ரோஜாவுக்கு முள் தேவையாயிருப்பது போல. கடுமைக்கும்,இனிமைக்கும், துன்பத்துக்கும், சுகத்துக் கும், இருளுக்கும், ஒளிக்கும் எத்தனை இணைப்பை பரமாத்மா ஏற்படுத்தியிருக்கிறான் என்பதை அந்தச் சமயத்தில் பொன்னாச்சி நினைத்துப் பார்த்தாள். சூரியரச்மியின் உஷ்ணம் தாமரையின் மலர்ச்சிக்கு எப்படித் தேவையாயிருக்கிறதோ அப்படித் தேவை யாயிருக்கிறது பெண்களின் பூவுடலுக்கு ஆண் மகனின் முரட்டுத்தனம் என்றும் எண்ணினாள் அவள். 'விடிவதற்கு முன் இயற்கை சிறிது கண்கள் மூடித்தான் திறக்கிறது ; அதனால்தான் அந்த நேரத்தை நாம் கருக்கல் என்கிறோம். அந்தக் கருக்கல் இப்படித்தான் இருக்க வேண்டும். கற்பு விஷயத்தில் என் விழிப்பை எல்லாம் பறித்து விட்டதே இந்த முரடன் அணைப்பு' என்று நினைத்ததால் அவன் மார்பில் புதைந்து கிடந்த தனது உதடுகளை சிறிது திறந்து புன்முறுவல் செய்தாள் பொன்னாச்சி. அவன் இறுகிய அணைப்பினால் அவள் மார்பகம் 'கிராதார்ஜுனியத் தில் அர்ஜுனன் விடை கொண்டபோது அவனை

வலிய அணைத்த பாஞ்சாலியின் மார்பைப் போல் ஆகியதென்றாலும், பாஞ்சாலி அடைந்த இன்பம் பொன்னாச்சிக்கும் இருக்கவே செய்தது. ஆகவே, அவள் கொழுகொம்பில் வளைந்து தாவி ஏறும் கொடி போல அவனுடன் வளைந்தாள், இணைந்தாள்.

வில்லியின் நிலை விவரிக்க இயலாததாயிருந்தது. அன்றுவரை எந்த யுவதியையும் ஏறிட்டுப் பார்க்காத தனக்கு அரசர் அரண்மனையில் அரசமகளின் தோழியைத் தழுவும் துணிவு எங்கிருந்து வந்தது என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அதுவும் தான் திருமணம் புரிந்துகொள்ள முடியாத தாசிகுலத்தாளிடம் அடிமைப் பட்டதை எண்ணி, இந்த உறவு எங்கு கொண்டுபோய் விடுமோ என்று சிறிது அச்சத்துக்கும் உள்ளானான். இருப்பினும் பொன்னாச்சியின் தூய்மை உள்ளத்தை உணர்ந்து தனுர்தாஸன், 'இவள், தாசியல்ல, தூய்மையின் உருவம்' என்று சொல்லிக் கொண்டான். அதன் விளைவாக அணைத்த நிலையிலேயே அவள் காதுக்கருகில் உதடுகளைக் கொண்டு போய், "ஹேமா" என்று மிக மெதுவாக அழைத்தான்.

ஹேமா பேசும் நிலையில் இல்லை. பேச்சு மறைந்து விட்ட தருணம் அது. ஆகவே "உம்" என்ற ஒரு உங்காரத்தை மட்டும் உதடுகளால் வெளியிட்டாள்.

"உன் உடல்..." என்று இழுத்தான் வில்லிதாஸன்.

"உம் ?"

"நடுங்குகிறது."

"இல்லை."

"என்ன இல்லை ?"

"நடுங்கவில்லை."

"என் கைக்குத் தெரிகிறதே."

ஹேமா மௌனம் சாதித்தாள். "சந்தன முல்லைக் கொடியைப் பார்த்திருக்கிறீர்களா ?" என்று கேட்டாள் தலையை நிமிர்த்தி வில்லியை நோக்கி.

அவன் கண்கள் அவள் கண்களைச் சந்தித்தன. "பார்த்திருக்கிறேன்" என்று மெல்ல சொற்களை உதிர்த்தன உதடுகள்.

"அவை காற்றில் ஆடும்" என்றாள் ஹேமா.

"ஆம்."

"அப்பொழுது மலர்கள் அலையும்."

"ஆம்."

"அது நடுக்கமல்ல, சிலிர்ப்பு."

இதற்கு வில்லிதாஸன் பதில் சொல்லவில்லை. "உவமை சரியாயில்லை, ஹேமா" என்று கூறினான் அவள் கண்களைப் பார்த்தவண்ணம்.

"அப்படியா !" என்றாள் ஹேமா.

"ஆமாம் ஹேமா ! என் கண்களில் படுவதெல்லாம் இரண்டு தாமரைகள், ஒரு கொவ்வைக் கனி" என்று கூறி அவள் கண்களையும் குவிந்த உதடுகளையும் தொட்டுக் காட்டினான் வில்லிதாஸன்.

"நல்ல வேளை" என்ற ஹேமா நகைத்தாள்.

"ஏன் ?" என்று கேட்டான் வில்லி.

"தாமரையைப் பற்றிச் சொன்னதும் பயந்து விட்டேன்" என்றாள் ஹேமா.

இதைக் கேட்டதும் அவன் கண்கள் அவள் முகத்தை விட்டுச் சிறிது இறங்கின. அவள் நடுங்கினாள், அச்சத்தாலா ? உணர்ச்சிப் பெருக்காலா ? அவளுக்கே புரியவில்லை. "பயமாயிருக்கிறது உங்கள் போக்கு" என்று மட்டும் கூறினாள்.

"என்ன என் போக்குக்கு ?" என்று வில்லி வினவினான்.

ஹேமா சிந்தித்தாள் சில விநாடிகள். "நாளைக்கு விஜயபுரி மல்லனைச் சந்திப்பதை நினைத்தேன்" என்று அவள் பேச்சை சிறிது மாற்றினாள்.

அந்த மாற்றுப் பேச்சு வில்லியையும் சிறிது மாற்றியது. "அவனை நினைக்கும்போது எனக்குக் கூட அச்சமாகத் தானிருக்கிறது. பெரிய மல்லன், பிரக்யாதி அதிகமாயிருக்கிறது" என்றான்.

அவனிடமிருந்து சிறிது விலகி நின்றாள் ஹேமா. "இதிலிருந்து தப்ப வழியில்லையா?" என்று கேட்கவும் செய்தாள்.

கலகலவென்று நகைத்தான் வில்லி, "வீரனுக்கு வழியில்லை; கோழைக்கு உண்டு," என்றான்

10. ஒருக்களித்த நிலை

சிந்தாமணியிலிருந்த தனது இல்லத்தின் பள்ளியறையில் பொன்னாச்சியின் பொற்பாதங்களை வருடிக் கொண்டிருந்த வில்லிதாஸன் அந்தப் பாதங்களை விட கமலங்கள் மென்மையாயிருக்க முடியாதென்று நினைத்தான். பிறகு அந்தப் பாதங்களிலிருந்த கைகளைச் சிறிது மேலே கொண்டு போய்க் கணுக்கால்களையும் வருடலானான். அதுவரை ஒருக்களித்துப் படுத்திருந்த பொன்னாச்சியை நோக்கி, "பொன்னாச்சி, ஒரு கால் மேல் இன்னொரு காலைப் போட்டுக் கொண்டு ஒருகளித்துப் படுப்பது உனக்கு வழக்கமாகி விட்டது" என்று சிறிது கோபித்துக் கொண்டான்.

பொன்னாச்சி தனது ஒரு காலை அகற்றிப் போட்டு, "உங்களுக்குப் பிடிக்க இடைஞ்சலாயிருக்கிறதாக்கும் !" என்று கூறிப் புன்முறுவல் செய்தாள்.

மேலிருந்த கால் விலக்கப்பட்டதால் அதையும் நன்றாகவே பஞ்சணையில் வைத்து அமுத்திப் பிடிக்கத் துவங்கிய வில்லிதாஸன், "ஆமாம், இடைஞ்சலாகத் தானிருக்கிறது. இது என்ன ஒருக்களித்துப் படுக்கிற வழக்கம் ?" என்று சொன்னான் அந்தக் காலையும் வருடிக் கொண்டு.

பொன்னாச்சி நகைத்தாள். "அந்தப் பழக்கம் நாணமுள்ள எல்லா ஸ்திரீகளுக்கும் இயற்கையில் வருவது. ஒருகளித்துப் படுப்பதால் பெண்களின் தேக நிலை யாருக்கும் விவரமாகத் தெரியாது. மல்லாந்து கிடப்பது நன்றாயிருக்காது" என்றாள்.

தனுர்தாஸன் அவளை வேண்டுமென்றே நன்றாக மல்லாத்திப் படுக்க வைத்து, "இப்பொழுது என்ன செய்வாய் ?" என்று கேட்டான்.

"எஜமானர் எது செய்தாலும் கேட்க முடியாது. கணவனிடம் பெண்கள் தங்கள் நாணத்தை அர்ப்பணித்து விடுகிறார்கள். அது தவறில்லை. கடமையும் கூட. ஆனால் மற்றவர்கள் கண்கள் முன்பு அவர்கள் ஒடுங்கித்தான் நிற்கவேண்டும். படுப்பதாயிருந்தால் ஒருக்களித்துப் முடங்கித்தான் படுக்க வேண்டும்" என்று விளக்கினாள் பொன்னாச்சி.

பஞ்சணையில் தன் கண் முன்பு விரிந்து கிடந்த அவள் எழில்களை நன்றாகப் பருகினான் தனுர்தாஸன். அவள் பெரிய கண்கள் அவனைப் பார்க்காமல் ஒரு புறமாகச் சாய்ந்து கிடந்தன. அப்படிச் சாய்ந்ததாலேயே அவற்றின் கவர்ச்சி அளவிட முடியாதிருப்பதை தனுர்தாஸன் கண்டான். அவை காந்தம்போல் தன் கண்களை மட்டுமின்றி உள்ளத்தையும் இழுப்பதைப் புரிந்து கொண்டான். விசாலமான அவள் நுதலும் கரிய குழலும், விற்புருவங்களும், சங்குக் கழுத்தும், 'திரச்சகார ப்ரமராபி லீனயோ : பங்கஜ கோசயோ ; ச்ரியம்' என்று காளிதாஸன்

வர்ணித்த அழகுகளும் தனுர்தாஸனின் பஞ்ச இந்திரியங்களையும் அடிமையாக்கிக் கொண்டிருந்தன.

தனுர்தாஸன் மெள்ள அழைத்தான், "ஹேமா!" என்று.

"உம்..."

"உன்னழகு..."

"பலமுறை உங்களிடம் அதைப்பற்றிக் கேட்டிருக்கிறேன்."

"எத்தனை முறை சொன்னாலும் எனக்குச் சளைக்கவில்லை; உனக்குச் சளைக்கிறதா ஹேமா?"

"எப்படிச் சளைக்கும்? பெண்கள் ஸ்தோத்திரப் பிரியர்கள். அதனால் ஆண்கள் அவர்களை இல்லாததும் பொல்லாததும் சொல்லி ஏமாற்ற முடிகிறது."

தனுர்தாஸன் சிறிது சிந்தித்தான். "பொன்னாச்சி, நான் இல்லாதது பொல்லாதது என்றதுமே சொன்னதில்லை. தவிர பெண்கள் ஸ்தோத்திரப் பிரியர்களாயிருப்பதில் தவறில்லை. எல்லோருமே ஸ்தோத்திரப் பிரியர்கள்தான். பகவானே ஸ்தோத்திரப் பிரியன். ஸ்தவ்ய: ஸ்தவப்பிரிய என்ற வாக்கியமில்லையா?" என்ற வில்லிதாஸன், "பொன்னாச்சி! நீ எதைச் செய்தாலும் நன்றாகத்தானிருக்கிறது. ஒருக்களித்துப் படுத்தாலும் அழகாகத்தானிருக்கிறாய். அடிக்காலை

வருட எனக்குத்தான் கஷ்டமாயிருக்கிறது" என்று விளக்கினான்.

பொன்னாச்சி சில விநாடிகள் பேசவில்லை. தனுர்தாஸனின் விசால முகத்தையும் கரிய விழிகளையும் கவனித்துக் கொண்டிருந்தாள். பிறகு புன்முறுவல் கொட்டிக் கேட்டாள், "இந்தக் கஷ்டம் மகாலக்ஷ்மிக்கும் இருக்குமல்லவா?" என்று.

வில்லிதாஸன் கண்களில் வியப்பு விரிந்தது. "எந்தக் கஷ்டம் பொன்னாச்சி?" என்று வினவினான்.

"ஸ்ரீ ரங்காநாதன் ஒருக்களித்துத்தானே படுத்திருக்கிறான்?" என்று ஹேமா கேட்டாள்.

"ஆம்" என்றான் தனுர்தாஸன் அவள் கேள்விக்குக் காரணம் புரியாமல்.

"அவர் காலை வருட பிராட்டிக்குக் கஷ்டமாயிருக்காதா?" என்று ஹேமா கேட்டாள்.

தனுர்தாஸன் சற்று விழித்தான் பதில் சொல்லத் தெரியாமல். "பகவான் எது செய்கிறான் என்பதை நாம் எப்படி அறியமுடியும்?" என்று கேட்டான்.

"இந்த கீழ்க்கால் மேல்கால் பிரச்னை இப்பொழுது எதற்கு?" என்று பொன்னாச்சி கேட்டாள்.

தனுர்தாஸன் சொன்னான்: "பொன்னாச்சி, நம்முடைய அசைவு ஒவ்வொன்றும் ஆண்டவனால் தீர்மானிக்கப்படுகிறது. நமது வழக்கங்களும்

அப்படியே. இந்தக் கால்மேல் கால்போடும் வழக்கங்கூட ஏதாவது ஒரு சமயம் நமக்குள் சச்சரவை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தலாம். இன்று உன்னைச் சாதாரணமாக விட்டுவிட்டேன். அன்று எப்படியோ ?''

இந்த விவரணத்தைக் கேட்ட பொன்னாச்சி நகைத்தாள். ''வரவர வேதாந்தியாகிக்கொண்டு வருகிறீர்கள் !'' என்றாள் நகைப்பின் ஊடே.

''நானாவது வேதாந்தியாவது ; ஒருகாலும் நடவாது. உன் கண்கள் ; இந்த மோகன உருவம் இருக்கும்வரை இவற்றுக்குத்தான் நான் அடிமை. சரிசரி, உன்னிஷ்டப்படி படுத்திரு'' என்று தனுர்தாஸன் அவளை மீண்டும் புரட்டி ஒருக்களித்து வைத்தான். அவள் கால்களையும் ஒன்றன்மேல் ஒன்றாக வைத்து, ''எப்பொழுதும் இப்படியே இரு'' என்று கூறி அவள் பக்கத்தில் படுத்தான்.

அன்று அவன் சொன்ன வார்த்தைகள் அவள் மனத்தில் ஆழப் புதைந்தன. பிற்காலத்தில் அதே வார்த்தைகள் எப்படி மாறப் போகின்றனவென்பது அப்பொழுது அவ்விருவருக்குமே புரியவில்லை. நாம் ஏதோ நினைத்துக்கொள்ளும் எண்ணங்களும், சொற்களுங்கூட பகவான் திருவுள்ளத்திலிருந்து வருகின்றன என்பதை நாம் புரிந்துகொள்வதில்லை. பொன்னாச்சியின் பக்கத்தில் படுத்துக் கிடந்த தனுர்தாஸன் ஏதோ நினைத்துக்கொண்டு, அவள் கால்களை வருடினான். அவன் கை அவள் காற்சிலம்பு ஒன்றன் மேல் நிலைத்தது. விலை

உயர்ந்த சிலம்பு அது. அந்தச் சிலம்பைத் தான் பூட்டியதை உணர்ந்தான் வில்லிதாஸன். பழைய நினைவுகள் அவன் உள்ளத்தை எங்கோ அள்ளிச் சென்றன.

அந்தச் சமயத்தில்தான் விதி பொன்னாச்சியை உந்தியது, அந்தக் கேள்வியைக் கேட்க, ''உங்களைத் தான்'' என்றாள் அவள்.

''ஏன் ?'' என்றான் தனுர்தாஸன்.

''நாளன்றைக்குத் திருவரங்கத்தில் கருட சேவை.''

''நடக்கட்டும்.''

''அதற்கு நான் போக வேண்டும்.''

''போய் வா.''

''நான் தனியாக எங்கேயாவது போயிருக்கிறேனா திருமணமான பின்பு ?''

''இல்லை.''

''இப்பொழுது மாத்திரம் எப்படிப் போவேன் ? பகவான் எழுந்தருளும் கண்கொள்ளாக் காட்சியை நீங்கள் பார்க்க வேண்டாமா ?''

''உன் கண்களைப் பார்த்தால் எனக்குப் போதும், வேறெதுவும் வேண்டாம்.''

இங்கு அதட்டினாள் ஹேமா, ''வருகிறீர்களா இல்லையா ?'' என்று.

தனுர்தாஸன் நகைத்தான். ''உத்தரவு, வருகிறேன்'' என்றான்.

கருடசேவை நாளும் வந்தது.

17. கருட ஸேவை

அகில புவனங்களையும் அண்டசராசரங்களையும் ஆட்டிப் படைக்கும் ஸ்ரீமந் நாராயணன் அழகிய மணவாளனாக ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்களுடன், ராமாவதாரகாலம் முதல் திருவரங்கத்தில் எழுந்தருளி, ஆச்ரித ரக்ஷணார்த்தம் எளியவுருக் கொண்டு உலோகத்தில் அடைந்தும் அடையாதவனாய், முகோல்லாஸ பூபதியாய் அன்று பெரிய திருவடியின் மீது, திருமேனி மூடப்பட்டாலும் திருமுகமண்டலம் கோடி ஸூர்ய ப்ரகாசமாய் ஜ்வலிக்க, ஆழ்வார்களும் அடியார்களும் நடந்து நடந்து பவித்ரமான சித்திரை வீதியில் பவனி வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது ஸூர்யோதயமாகி பத்து நாழிகைக்கு மேலாகிவிட்டதால் பகலவன் தனது உஷ்ணத்தை அதிகமாக வீசி சித்திரை வீதியின் மடப்படிகளை அக்கினிப்படிகளாக அடித்துக் கொண்டிருந்தான்.

அதை எதிர்பார்த்தே வீதிகளில் முன்னரே திருவரங்க மதிமுக இல்லத்தரசிகள் ஆங்காங்கு நீர் தெளித்து, விதவிதமாகக் கோலமிட்டு வைத்திருந்ததால் அந்த வீதிகளில் சூர்ய உஷ்ணமும் ஓரளவு சமனப் பட்டிருந்தது. கோலங்களின் கலைச்சிறப்பும் கண்களைப் பறித்தது. இத்தகைய வீதியில் பவனி வந்த பரமாத்மாவின் ஸ்ரீபாதந்தாங்கிகளுக்கும் சரி, முன்னே சென்று கொண்டிருந்த திவ்ய ப்ரபந்த கோஷ்டிக்கும் சரி, எம்பெருமானுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த வேதகோஷ்டிக்கும் சரி துன்பமேதுமில்லாத நிலையிருந்தது.

எம்பெருமான் பிரபந்தத்தை ஏன் பின் தொடர்ந்தான்? இலக்கியத்தை இலக்கணம் ஏன் பின் தொடர்ந்தது? த்வதுபகத ஸாமாஸ ஸந்தியோகம் என்ற க்ரமப்படி ஸ்ரீ ராமாயண சுலோகங்கள் வால்மீகி பகவான் முகத்தால் உதிர்ந்த பின்னர் ஸாமஸ ஸந்தி இலக்கணங்கள் அந்த இலக்கிய அமைப்புப்படி பின் தொடர்ந்தன. அம்மாதிரியே ஸர்வ லக்ஷண ஸம்பன்னனாய் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானும் லக்ஷ்யரந்தமான பிரபந்தப் பாசுரங்களைப் பின் தொடர்ந்தான்.

அப்பேர்ப்பட்ட 'சந்த்ர காந்தாநநம் ராமம்' என்ற வால்மீகியின் வசனப்படி ஜாஜ்வல்யத்துடன் குளிர்ந்து மிக அழகாகக் காணப்பட்ட எம்பெருமான் முகத்தை, சற்றே கழுத்தை வளைத்து கருடாழ்வான் நோக்கிய வண்ணமே வந்து கொண்டிருந்தான். தன்னுடைய வேகத்தையும் கர்வத்தையும் த்வாபர யுகத்திலேயே அடக்கியவனும், அதற்கு முன்பாகத் தன்னை அலக்ஷ்யம் செய்து ஆதிமூலமே என்றலறின கஜேந்திரனைக் காக்க விரைந்தவனும், அதனாலேயே அவன் சக்தியிலிருந்தே தனக்கு சக்தி பிறக்கிறது என்று உணர்ந்தவனுமான கருடன்,

அந்த சக்தியை நிரந்தரமாகப் பெறும் நோக்கத்துடன் அழகிய மணவாளனுடைய திருமுக மண்டலத்தையே நோக்கிக் கொண்டிருந்தான்.

ஆதிமூலமே என யானை அலறினவுடனேயே தான் ஆதிவஸ்து என்பதை நிரூபிக்கப் பள்ளியரவணையைத் தள்ளியெழுந்த பகவான் 'பங்கயத் திருவைப் பாரான், பணிமுடி நிழலைத் தேடான், சங்குசக்கர முமேந்தான், தன்னெதிர் தொழுது நிற்கும் இங்கிதக் கருடன் மீதில் ஏறினான்...' என்ற சமீபகால வெண்பாவின்படி விரைந்தான் விலங்கைக் காக்க. அந்த நிகழ்ச்சியை நினைத்த கருடன் 'கண்கள் அன்றிலிருந்து பகவந்நிய மனத்திற்காக அவன் கண்களையே நோக்கிக் கொண்டிருந்தன.

அன்றும் அந்த சேவையை ஏராளமான உள்ளூர் பக்த கோடிகளும் வெளியூர் யாத்ரிகர்களும் வந்து ஸேவித்துக் கொண்டிருந்தார்கள். கருடாரூடனான அரங்கன் தெற்குச் சித்திரை வீதியில் எழுந்தருளிக் கொண்டிருந்தபோது மற்ற வீதிகளைவிட அவ்வீதியில் ஜனநெருக்கம் தாங்க முடியவில்லை. 'உழுந்திட இடமிலை உலகமெங்கணும்' என்று சீதா கல்யாண காலத்தில் மிதிலையில் இருந்த ஜன நெருக்கடியை அந்த வீதியும் கொண்டிருந்தால் ஒருவருக்கொருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு ஈடுபட்டிருந்தார்கள். கருடவாகன ஸேவையில் பகலவன் உயரக் கிளம்பித் தகித்த உஷ்ணத்தைக் கூட மக்கள் லக்ஷ்யம் செய்யவில்லை.

இந்த நிலையில் உடையவர் கோபுர வாயிலில்
ஒருபுறமாக நின்று பெருமாளை ஸேவித்துக் கொண்
டிருந்தார். அவருடைய மனமெல்லாம் பார்வை
யெல்லாம் மயர்வற மதிநலமருளிய அழகிய
மணவாளன் மீதே நிலைத்திருந்ததால் சுற்றுப்புறங்
களை மறந்தார். யோக சித்தியில் ஆழ்ந்தார்.
அத்தகைய அவருடைய மனத்தையும் கலைக்கும்
படியான விசித்திர நிகழ்ச்சியொன்று அவரெதிரே,
சற்று தூரத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது.

திடீரெனப் பெருங்கூச்சல், மக்கள் சினத்துடன்
எழுப்பிய அவதூறு வார்த்தை. லேசாக அடிதடி.
இத்தனையும் அவருடைய தியானத்தைக் கலைக்க
வில்லையானாலும், பக்கத்திலிருந்த ஆண்டானும்,
இதர சிஷ்யகோடிகளும், "ஸ்வாமி! அதோ
பாருங்கள்" என்று இரைந்தே விண்ணப்பித்துக்
கொண்டார்கள். அதனால் கண் விழித்த எம்பெரு
மானார் எதிர்ச்சாரியைக் கவனித்தார்.

அங்கு மல்லனான தனுர்தாஸன் பொன்னாச்சி
யைக் கூட்டத்திலிருந்து காக்கச் சுற்றிலுமிருந்தவர்
களை இடித்துத் தள்ளிக்கொண்டிருந்தான்.
அவளுடைய தளிர்க் கால்களை மணலின் உஷ்ணத்
திலிருந்து காக்கத் தனது பட்டு அங்கவஸ்திரத்தை
அவள் காலுக்கு நடைபாவாடையாகப் போட்டு
அதன்மீது அவளை நிற்கச் செய்தான். பட்டுக்
குடை விரித்து, அவள் தலைக்கு சூரிய உஷ்ணத்
திலிருந்து பாதுகாப்பு அளித்துக் கொண்டிருந்தான்.
அவள் கண்களையே உற்று நோக்கிக் கொண்டிருந்

தான். அவள் மட்டும் கரம் குவித்துக் கொண்டு பெருமாளைச் சேவித்துக் கொண்டிருந்தாள். வில்லிதாஸன் பெருமாளைத் திரும்பியும் பார்க்க வில்லை. இந்த விந்தையை நீண்ட நேரம் கவனித் துக் கொண்டிருந்த எம்பெருமானார் பக்கத்திலிருந்த ஆண்டானை நோக்கி அவன் யாரென்று விசாரித்தார்.

"ராஜமல்லன் வில்லிதாஸன்" என்றார் ஆண்டான்.

"அவனை நமது மடத்துக்கு அழைத்துவா" என்று ஆக்ஞாபித்தார் உடையவர்.

"எதற்கு ஸ்வாமி?" என்று ஆண்டான் கேட்டார்.

"முன்பொருநாள் ஏகாக்ரசித்தனாக இருக்க வேண்டியதைப் பற்றிக் குறிப்பிட்டேனல்லவா" என்று உடையவர் சாதித்தார்.

"ஆம்" என்றார் ஆண்டான்.

"அவனை அழைத்து வா" என்று கூடமாகச் சொன்னார் எம்பெருமானார். மீண்டும் அவருடைய அருட் கண்கள் வில்லிதாஸனை நோக்கின.

18. அமுதனைக் கண்ட கண்கள்

வில்லிதாஸனைக் கூர்ந்து நோக்கிய எம் பெருமானாரின் அருட்கண்களில் தீர்க்க சிந்தனை படர்ந்து கிடந்தது. அவர் பக்கத்தில் நின்று அவர் முகத்தை நோக்கிக் கொண்டிருந்த மற்ற மடத்துச் சீடர்களுக்கும் உடையவர் கண்களில் விரிந்த தீர்க்க சிந்தனைக்குக் காரணம் விளங்கவில்லை. எதிரே அழகிய மணவாளன் கருடாரூடனாக சேவை சாதிக்கும்போது உடையவர் அவனைக் கவனிக்கா மல் வேறு எங்கோ சித்தத்தைச் சுழலவிட்டிருக்கும் காரணம் புரியவில்லை அவர்களுக்கு. மகான்கள் மனத்திலோடும் எண்ணங்களைச் சாதாரண மனிதர் கள் எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? அப்படிப் புரியாத காரணத்தால் அடுத்து நடந்த நாடகத்தைச் சீடர்கள் கவனிக்கலானார்கள்.

உடையவரால் ஏவப்பட்ட ஆண்டான் தனுர்தாஸனருகில் சென்று அவன் கவனத்தைப் பொன்னாச்சியின் கண்களிலிருந்து திருப்ப, "மல்லரே! மல்லரே!" என்று இருமுறை அழைத் தார். அந்த அழைப்பு மல்லன் காதில் விழுந்த தாகவே தெரியவில்லை. ஆனால் பொன்னாச்சி மட்டும் ஆண்டானைக் கவனித்ததால், "உங்களை யாரோ ஸ்வாமி ஒருவர் அழைக்கிறார்" என்று சொல்ல, மல்லன் திரும்பினான் ஆண்டானை

நோக்கி, "ஸ்வாமி யார்? என்ன? வேண்டும்" என்று வினவினான் முரட்டுத்தனமாக.

"எம்பெருமானார் உங்களைப் பார்க்க விரும்புகிறார்" என்று ஆண்டான் பதில் சொன்னார் இகழ்ச்சி நிரம்பிய குரலில்.

"யார் எம்பெருமானார்?" என்று வினவினான் வில்லிதாஸன்.

இந்த இடத்தில் குறுக்கே புகுந்த பொன்னாச்சி, "ஜகதாசார்யரை உங்களுக்குத் தெரியாதா?" என்று வியப்புடன் வினவினாள் கணவனை நோக்கி.

"உன்னைத் தவிர வேறு யாரையும் எனக்குத் தெரியாது" என்ற தனுர்தாஸன் மீண்டும் அவள் கண்களை நோக்கலனான்.

அவள் எதிர் வரிசையில் நின்றிருந்த எம்பெருமானரை நோக்கி நடக்கலானாள். கீழே கிடந்த பட்டை உதறித் தோள்பேல் போட்டுக் கொண்டு தனுர்தாஸனும் அவளைப் பின்தொடர்ந்தான். எம்பெருமானார் இருந்த இடத்துக்கு வந்ததும் மணலில் மண்டியிட்டு அவரை வணங்கினாள் பொன்னாச்சி.

அவள் செய்ததைத் தானும் செய்யவேண்டுமென்று கருதி மல்லனும் மெல்லத் தலை வணங்கினான் எம்பெருமானரை நோக்கி. ஆனால் அவரை வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றான்.

பொன்னாச்சி முகத்தில் பெருமிதம் நின்றது. "ஸ்வாமி, இவரை அழைத்தீர்களா?" என்று வினவினாள் பொன்னாச்சி.

"ஆம் அம்மா. இவனிடம் சிறிது நேரம் பேச வேண்டும்" என்றார்.

பொன்னாச்சி தனுர்தாஸனை நோக்கித் திரும்பினாள். "என்ன பாக்கியம் செய்தீர்கள்! ஸ்வாமியே உங்களுடன் பேச விரும்புகிறார். நீங்கள் பேசுங்கள். நான் சிறிது நேரம் அப்புறமாக நிற்கிறேன்" என்ற பொன்னாச்சி சிறிது நகர முற்பட்டாள்.

அவளை நிறுத்த முயன்ற தனுர்தாஸனைக் கண்ணின் ஒரே பார்வையால் நிறுத்தினார் எம்பெருமானார். அந்தப் பார்வையின் சக்தியால் அவன் கால்கள் செயலிழந்தன. நகர மறுத்தன. சிலையென நின்றான் வில்லி.

எம்பெருமானார் அடுத்து பொன்னாச்சியை நோக்கி, "அம்மா! நீ மடத்துக்குப் போ. இவனை அப்புறம் அழைத்து வருகிறேன்" என்று கூறிவிட்டு அவளை அழைத்துச் செல்ல ஒரு சீடனுக்கும் உத்தரவிட்டார். பொன்னாச்சி ஏதும் பேசாமல் சீடனைத் தொடர்ந்தாள்.

அவள் போவதை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான் வில்லிதாஸன் சில விநாடிகள். பிறகு உடையவரை நோக்கித் திரும்பி, "ஸ்வாமி! என்னை எதற்காக அழைத்தீர்கள்?" என்று வினவினான்.

உடையார் இதழ்களில் இளநகை அரும்பியது. "வில்லி, எல்லோரும் கருடாருடனான பகவானை சேவிக்கிறார்கள். எல்லோருக்கும் இடைஞ்சலாக நீ உன் மனைவியையே பார்த்துக்கொண்டிருந்தாய். கிட்டே வந்தவர்களை இடித்துத் தள்ளினாய். அவளுக்கு நடைபாவாடை விரித்தாய். உனக்கு வெட்கமாயில்லையா?" என்று வினவினார் எம்பெருமானார்.

வில்லிதாஸன் உடையவரின் அருட்கண்களை நோக்கினான். முரட்டுத்தனமாக ஏதோ பேச எடுத்த அவன் வாயில் சில விநாடிகள் வார்த்தை வரவில்லை. வந்தபோது சொற்கள் மிக அடக்கமாகவும் மரியாதையுடனும் இருந்தன. "ஸ்வாமி! காரணம் சொன்னால் உங்களுக்குப் புரியாது. நீரோ சந்யாசி" என்றான்.

"எதற்கும் சொல்" என்று ஆக்ஞாபித்தார் உடையவர்.

சிறிது சிந்தித்தான் தனுர்தாஸன். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கேட்டான், "ஸ்வாமி, பொன்னாச்சியின் கண்களைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று.

"பார்க்கவில்லை. பார்த்தாலும் என்ன இருக்கப் போகிறது? கேவலம், மாமிசக் கண்கள்" என்றார் உடையவர்.

"ஸ்வாமி, அந்தக் கண்களைப்பற்றி உமக்குப் புரியாதென்று முன்னமேயே சொன்னேன். மற்றவர்கள் கண்களைப் போன்றவையல்ல பொன்னாச்சி

யின் கண்கள். அவற்றில் தனி அழகு உண்டு. அம்மாதிரி அழகு இந்த ஜகத்தில் கிடையாது. அவள் தளிர் மேனியை சூர்ய உஷ்ணத்தினின்று காக்க வேண்டியது என் கடமை. அந்தக் கண்களில்லா விட்டால் எனக்கு ஜீவனில்லை சுவாமி. அமுதம் சொட்டும் கண்கள்" என்று விளக்கினான் தனுர்தாஸன். அவன் குரலில் உணர்ச்சி நிரம்பிக் கிடந்தது. கண்கள் கனவுலகத்திலிருந்தன.

உடையவர் வில்லியின் உணர்ச்சி வேகத்துக்கு இடங்கொடுத்துக் காத்திருந்தார். அந்த வேகம் சிறிது இறங்கியதும், "வில்லிதாஸா, பொன்னாச்சியின் கண்கள் அவ்வளவு சிறந்தனவா?" என்று வினவினார்.

"ஆம் ஸ்வாமி! காவிரித்தாயின் கண்களைவிட அழகியவை" என்றான் வில்லி.

"காவிரித்தாயின் கண்களா?" உடையவர் வியப்புடன் வினவினார்.

"ஸ்வாமி! சித்தாமணிப் படித்துறைக்கு அருகில் காவிரியன்னை சுழித்து ஓடுகிறாள் இரண்டு இடங்களில். அந்தச் சுழல்கள் இரண்டும் அவள் கண்கள். தினம் அவற்றைப் பார்க்கக் காவிரிப் பக்கம் செல்வேன். அங்குதான் ஹேமாவைச் சந்தித்தேன். அங்கு படித்துறையில் அவள் கண்களைக் கண்டேன். தாயின் கண்களிலிருந்து அவற்றில் ஈடுபட்டேன். பிறகு பார்வை மாற வில்லை" என்று கடந்த நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகச் சொன்னான் வில்லிதாஸன்.

"வில்லி" என்றார் உடையவர்.

"ஸ்வாமி !"

"அவள் கண்களைவிட அழகான கண்கள் இருக்கின்றன."

"இருக்க முடியாது ஸ்வாமி."

"காட்டுகிறேன், பார்க்கிறாயா ?"

"பார்க்கிறேன் ஸ்வாமி. ஆனால், எந்தக் கண்களும் ஹேமாவின் விழியழகைத் தோற்கடிக்க முடியாது" இதைத் திட்டமாகச் சொன்னான் வில்லி.

"சரி, வா என்னுடன்" என்ற உடையவர் அரங்கன் கோவிலை நோக்கி நடந்தார். வில்லிதாஸனும், ஆண்டானும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். கருட சேவை முடிந்து அரங்கன் ஸ்வஸ்தானத்துக்கு எழுந்தருளினான். சேவார்த்திகள் எல்லோரும் சென்ற பிறகு உடையவர் வில்லிதாஸனை மட்டும் உடன் அழைத்துக் கொண்டு கர்ப்பக்கிரகம் சென்றார். உடையவர் வந்ததும் பூட்டியிருந்த கர்ப்பக் கிரகக் கதவுகள் தாமாகத் திறந்தன. அதைக் கண்ட வில்லிதாஸன், 'இந்த ஸ்வாமி ஒருவேளை மந்திரவாதியோ ?' என்று நினைத்தான்.

மேலே அவன் நினைப்பு ஓட இடமில்லை. உள்ளே சென்ற உடையவர், "வில்லி ! வா !" என்று அழைத்தார்.

வில்லியும் உள்ளே சென்றான். உள்ளே சென்றதும் அவன் மனத்தில் அவனையும் அறியாமல் ஏதோ மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

"வில்லி ! அதோ அந்தக் கண்களைப் பார்" என்ற உடையவரின் சொற்கள் வெகு தூரத்திலிருந்து சப்திப்பனபோல் விழுந்தன வில்லியின் காதுகளில்.

வில்லி நோக்கினான், நோக்கினான், நோக்கிக் கொண்டேயிருந்தான். அர்ச்சா ஸ்வரூபியான பகவான் கடலினும் பெரியவாய தனது கண்களை அகல விரித்தான். பெரும் பிரமை ஏற்பட்டது வில்லிதாஸனுக்கு. அந்தக் கண்கள் அவன் கண்களைப் பற்றி நிலைக்கச் செய்து விட்டன. வேறு ஒரு உலகத்துக்கு வில்லி சென்று விட்டான். எந்தக் கண்களின் பார்வைக்குத் தேவர்களும் ரிஷிகளும் ஏங்கி நின்றார்களோ, அந்தக் கண்கள் அந்தப் பிற்போக்கு வகுப்பினனை, மூர்க்கனை காந்தம் போல் ஈத்து நின்றன.

அந்தச் சமயத்தில் எங்கிருந்தோ ஒலித்தன உடையவரின் ஆழ்ந்த குரல். "என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்ற திருப்பாணரின் சொற்களை அனுசந்தானம் செய்தன உடையவரின் உதடுகள்.

வில்லி பிரமையின் எல்லையை எட்டியிருந்தான். அவன் ஐந்து இந்திரியங்களும் எம்பெருமானிடம் உறைந்துவிட்டன. சிறிது திரும்பினான். உடையவர் எம்பெருமானைப் போலவே நின்றிருந்தார் தமது தங்கத் திருமேனியுடன். அதிலிருந்து வீசிய காந்தியில் குளித்தான் தனுர்தாஸன். அடுத்த விநாடி வேரற்ற மரம்போல் அவர் திருவடிகளில் விழுந்தான்.

19. புதுத்தொழில்

வேரற்ற மரம்போல் தமது திருவடிகளில் விழுந்து கிடந்த வில்லிதாஸனை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே நின்றார், வையகம் வாழ்விக்க வந்த கருணை வள்ளல் உடையவர். பிறகு குனிந்து தமது இரு கைகளாலும் வில்லிதாஸனை மெள்ளப் பிடித்துத் தூக்கி நிற்க வைத்தார். அவரை மேலும் தனது பிரமை பிடித்த கண்களால் நோக்கினான் தனுர்தாஸன். சதா தேகப் பயிற்சியால் திண்மையும் வன்மையும் கனமும் மிக்க தனது சரீரத்தைத் தூய்மையான துறவறத்தாலும் காயக்கிலேசத்தாலும், வயோதிகத்தாலும் தளர்ந்து கிடந்த திருமேனியை உடைய அந்த சந்நியாசி எப்படித் தூக்க முடிந்தது என்று எண்ணியதால், விவரிக்க இயலாத வியப்பு களுக்குள்ளானான் தனுர்தாஸன். அதை வாய் விட்டும் கேட்டான்: "ஸ்வாமி! இந்த மாமிச பிண்டத்தைத் தங்களால் எப்படித் தூக்க முடிந்தது?" என்று.

உடையவர் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது. "அப்பா! சக்தி மனத்திலிருந்து உண்டாகிறது, தேகத்திலிருந்து அல்ல. சக்தியை வளர்ப்பது நாமல்ல, அவன்" என்று அழகிய மணவாளனைச் சுட்டிக் காட்டினார் எம்பெருமானார்.

தனுர்தாஸன் மீண்டும் சிந்தித்தான் சில விநாடிகள். "ஸ்வாமி! தாங்கள் கூறும் சக்தியைப் பெற மந்திரம் ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டான் சிறிது நேரச் சிந்தனைக்குப் பிறகு.

"இருக்கிறது" என்றார் எம்பெருமானார் சாந்தம் நிரம்பிய குரலில்.

"அதை எனக்குச் சொல்லித் தருகிறீர்களா?" என்று குழந்தை போல் கெஞ்சினான் வில்லி.

"சொல்லித் தருகிறேன்." உடையவர் பதில் உடனடியாக வெளியே வந்தது.

"மந்திரம் ரகசியம் என்று சொல்கிறார்களே!" வில்லிதாஸன் சந்தேகத்துடன் வினவினான்.

"ஒரு காலத்தில் அப்படித்தானிருந்தது. அது திருக்கோட்டியூரில் உடைந்துவிட்டது. அதை யாரும் கற்கலாம், சொல்லலாம்."

"மிகவும் கஷ்டமான மந்திரமா ஸ்வாமி?"

"இல்லை. மிகச் சுலபமானது. எட்டே எழுத்துக்கள் கொண்டது."

"எட்டு எழுத்துக்களில் அத்தனை சக்தி அடங்கி யிருக்கிறதா?"

"ஆமாம்."

வில்லிதாஸன் மறுபடியும் உடையவர் திருவடி களில் விழ முயன்றான். உடையவர் அவனைத் தமது இருகைகளாலும் பற்றி நிறுத்தினார். வில்லி தாஸன் விழிகளில் துன்பத்தின் சாயை படர்ந்தது.

"ஏன் ஸ்வாமி ! இன்னொரு முறை நான் சேவிக்கக் கூடாதா ?" என்று கேட்டான் துன்பத்தின் சாயை குரலிலும் படிய.

உடையவர் தமது திருக்கைகளால் அவன் இரு தோள்களையும் பற்றிய வண்ணம் சொன்னார், "சேவிக்கலாம். ஆனால் நீ ஒரு முறை சேவிக்கும் போதே நான் கடனாளியாகிவிட்டேன். இரண்டாம் முறை சேவித்தால் கடனை எப்படித் தீர்ப்பேன் ?" என்று.

"நீங்கள் சொல்வது விளங்கவில்லை ஸ்வாமி" என்றான் தனுர்தாஸன் குழப்பத்துடன்.

உடையவர் அவனை ஒருமுறை நோக்கினார். "வில்லிதாஸா ! உன் கைகளைக் கூப்பிக் கொண்டு பெருமாளைப் பார்" என்று சொன்னார்.

அப்படியே செய்தான் வில்லிதாஸன். "இரண்டு முறைகள் கைகளைத் திரும்பத் திரும்பக் கூப்புகிறோமா ?" என்று கேட்டார் உடையவர்.

"இல்லை ஸ்வாமி."

"ஏன் தெரியுமா ?"

"சொல்லுங்கள் ஸ்வாமி."

"நீ செய்ததற்கு அஞ்சலி என்று பெயர்."

"கேட்டிருக்கிறேன் ஸ்வாமி."

"அம் ஜலயதி இதி அஞ்சலி என்று அந்த சொல்லைப் பிரிக்கிறார்கள் பெரியவர்கள். நீ கை கூப்பியவுடன் அகாரவாச்யனான எம்பெருமான்

கருணையால் ஜலமாக உருகிவிடுகிறான். உனக்குக் கடனாளியாகிவிடுகிறான். உன் சுகதுக்கங்களை அவன் சுமக்கிறான். அப்படியிருக்க அவனை மேலும் கடனாளியாக்கலாமா ?" இப்படிக் கேட்ட ராமானுஜர், "அப்படித்தான் சேவையும். ஒரு முறை சேவித்தால் போதும். எத்தனை முறை சேவித்தாலும் பலன் முதல் சேவையில் கிடைப்பது தான். ஆகையால் வில்லிதாஸா ! நீ என்னைச் சேவித்தது போதும். வா போவோம்" என்று சந்நிதியை விட்டு நடக்க முற்பட்டார்.

வில்லிதாஸன் அசையவில்லை. "ஒரு சந்தேகம்" என்றான்.

"என்ன ?" திரும்பியவண்ணம் கேட்டார் எம்பெருமானார்.

"தாங்கள் என்னைத் தொட்டு தூக்கிவிட்டீர்கள்" என்று சொன்ன வில்லிதாஸன் குரலில் துன்பமிருந்தது. குற்றம் புரிந்தவன் குரலாகவும் தெரிந்தது.

"அதனாலென்ன ?" என்று கேட்டார் உடையவர்.

"நான் கீழ்க்குலத்தவன்" என்று விளக்கினான்.

உடையவர் இதழ்களில் மந்தகாசம் விரிந்தது. 'வில்லிதாஸா ! அதோ எம்பெருமானுக்குப் பக்கத்தில் நிற்பவர் யார் தெரியுமா ?" என்று வினவினார் பக்திப் பிரவாகம் குரலில் பாய்ந்தோட.

"தெரியாது ஸ்வாமி !" என்று தனுர்தாஸன் தனது அறியாமையைக் காட்டினான்.

"அவர்தான் திருப்பாணாழ்வார், பஞ்சமர். அவரைத் தோளில் தூக்கி வரும்படி பெருமாள் லோகசாரங்க முனிவர் என்ற அந்தணருக்குக் கட்டளையிட்டார். அப்படி வந்தவர் எம்பெருமான் கண்களைப் பார்த்தார். வேறொன்றைப் பார்க்காமல் இங்கேயே மோக்ஷமடைந்தார். ஆகையால், பகவான் தனது அடியார்களின் முகத்தைப் பார்ப்பதில்லை. குணத்தைப் பார்க்கிறான். மனப் பக்குவத்தைப் பார்க்கிறான். பக்தியைப் பார்க்கிறான்" என்று கூறிவிட்டு கர்ப்பக்கிரகத்திலிருந்து வெளியே நடந்தார். வில்லிதாஸனும் பின் தொடர்ந்தான். வெளியே கருட மண்டபத்தில் பொன்னாச்சி ஆண்டானுடன் நின்றிருந்தாள். அவளை ஏறெடுத்தும் பார்க்காமல் எம்பெருமானாரைப் பின்பற்றி நடந்தான் வில்லிதாஸன்.

பொன்னாச்சி தனது பக்கத்தில் நின்ற ஆண்டானைக் கவனித்தாள். பிறகு அவர்கள் இருவரும் உடையவரையும் வில்லிதாஸனையும் பின் தொடர்ந்தனர் எம்பெருமானார் தமது மடத்துக்கு வந்ததும் வில்லிதாஸனை ஏறெடுத்தும் பார்க்காமல் உள்ளே சென்றார். வில்லிதாஸன் வாயிலிலேயே திண்ணையில் உட்கார்ந்து கொண்டான். பொன்னாச்சி அவனை நெருங்கிய போது அவன் பிரமை பிடித்த முகத்தைப் பார்த்தாள். "ஏனிப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் மதுரமான குரலில்.

ஏதும் பதிலில்லை அவள் கேள்விக்கு. ஆகவே இரண்டாவது முறை கேட்டாள், "அரச மாளிகையில் வேலைக்குப் போக வேண்டாமா?" என்று.

அவள் கண்களைக் கண்டு சதா மயங்கிய வில்லிதாஸன் இடித்த புளி போல் உட்கார்ந்திருந்தான். பிறகு மெள்ளச் சொன்னான், போக வேண்டாம்" என்று.

"ஏன்?" பொன்னாச்சியின் குரல் குழப்பத்துடன் ஒலித்தது.

"எனக்கு இனிமேல் இருப்பிடம் இதுதான்." வில்லிதாஸன் பதில் திட்டமாக இருந்தது.

"அப்படியானால் தொழில்?"

"இருக்கிறது."

"புதுத் தொழிலா?"

"ஆம்."

"அது என்னவோ?"

"எம்பெருமானாருக்கு அடிமையாய் இருப்பது" என்ற வில்லிதாஸன், "நீ வேண்டுமானால் வீட்டுக்குப் போ" என்றான்.

பொன்னாச்சி தீர்க்க சிந்தனையில் இறங்கினாள். பிறகு அவன் காலடியில் உட்கார்ந்தாள்.

20. காவிரிக்கரை சம்பவம்

பதினைந்து ஆண்டுகள் பறந்து ஓடின. ஸ்புடம் போட்ட தங்கம் போல் ஆனான் தனுர்தாஸன். மல்லனாய் மதயானை போல் நெற்றியில் திலகமிட்டு மல்லரங்கில் வேற்று நாட்டு வீரர் பலரை வீழ்த்தி வீரநடை போட்டிருந்த அவன் வாழ்க்கையில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. நெற்றியில் திலகத்துக்குப் பதில் திருமண் காப்பு துலங்கியது. முஷ்டி பிடித்த கை வாளேந்தி பெருமாள் புறப்பாடும் சமயங்களில் முன்னே சென்று, அழகிய மணவாளனின் புறப்பாட்டுக்கு ஒரு கம்பீரத்தையும் தனி அழகையும் அளித்தது. மல்லாடும் சமயங்களில் வீரத்துவனிகளை உதிர்த்த வாய் பெருமாளுக்கு பராக்கையும், எத்ஸரிகையையும் உதிர்த்தது. கண்களில் முன்பிருந்த வீர அக்னி, சாந்தத்துக்கும் கருணைக்கும் இடங்கொடுத்திருந்தது.

இத்தகைய மாறுதல்கள் தனது வாழ்க்கையில் ஒரே நாளில் ஏற்படுமென்று தனுர்தாஸனே நினைக்கவில்லை. பரந்தாமன் பங்கஜாக்ஷங்களும், உடையவரின் திருவடிகளும் அளித்த மாறுதல் உள்ளத்தில் முதல் நாளே உறைந்து விட்டதால் புது மனிதனாகி விட்ட தனுர்தாஸன், வைஷ்ணவத்தின் குளிர் நீரில் குளித்து, "எத்தகைய இன்பத்தை இத்தனை நாள் இழந்து விட்டோம்" என்று ஏங்கினான். கர்ப்பக்

கிரஹத்தில் எம்பெருமானுடைய கண்களாலும் எம்பெருமானாரின் திருவடிகளாலும் பாவனமாக்கப்பட்ட தனுர்தாஸன், அன்று முதலே தனது பழைய இல்லத்துக்கும் போகவில்லை. தொழிலுக்கும் போகவில்லை. அன்னையும் காலமாகி விட்டதால், அங்கு போய் விடை பெற்று வரவும் அவசியமில்லாதிருந்ததால் காவிரிக்கரை மீதே தனக்கு ஒரு குடிசையையும் கட்டிக்கொண்டான்.

இப்படி ஒரு தீர்மானத்துக்கும் வாழ்க்கை நிர்ணயத்துக்கும் வந்துவிட்ட வில்லி, பொன்னாச்சியை அழைத்து, "நீ வேண்டுமானால் சிந்தாமணி வீட்டில் போய் இருக்கலாம்" என்றான், மனம் பக்குவப்பட்ட முதல் நாளே.

அப்பொழுது மடத்துக்குள்ளே திருவாராதனம் நடந்து கொண்டிருந்தது. "இருப்பிடம் வைகுந்தம்," என்ற சொற்கள் பெரும் ஒலியுடன் இருவர் காதுகளிலும் விழுந்தன. பொன்னாச்சி புன்முறுவல் கொண்டாள். வில்லிதாஸனை நோக்கி, "காதில் விழுகிறதா ?" என்று வினவினாள்.

"எது ?" வில்லிதாஸன் தெரியாததுபோல் கேட்டான்.

"எம்பெருமானார் கட்டளை" என்றாள் பொன்னாச்சி.

"என்ன கட்டளை ?"

"இருப்பிடம் வைகுந்தம் என்று சொல்கிறார். அவர் த்வனி நன்றாகக் கணீரென்று ஒலிக்கிறது."

"அதனால் ?"

"உங்கள் இருப்பிடந்தான் எனக்கு வைகுந்தம் என்று கட்டளை பிறக்கிறது."

"இல்லை இல்லை. அது சாற்றுமறைப் பாட்டு"

"அதுவும் நமது விதியை முன்னிட்டு ஒலிக்கிறது. சாற்றுமுறைப் பாட்டுக்கும் பொருளுண்டு. நமது வாழ்க்கை சம்பந்தமாக எதிலும் உத்தரவு உண்டு.

"நீ வேதாந்தியாகி விட்டாய்."

"கணவன் எவ்வழி அவ்வழி மனைவி."

"நீ தாஸி."

"உங்களுக்கு"

பளீர் பளீரென வந்த இந்தப் பதில்களுக்கு வில்லிதாஸனால் பதில் சொல்லமுடியவில்லை. அவள் முகத்தைப் பார்த்தான். அதில் தெய்வீக ஒளி வீசிக் கொண்டிருந்தது. "புரிகிறது" என்று தலையை ஆட்டிக் கொண்டான் தனுர்தாஸன்.

"என்ன புரிகிறது ?" என்று வினவினாள் பொன்னாச்சி.

"நீ கருடசேவைக்கு அழைக்காவிட்டால், நான் வந்திருக்கப் போவதில்லை. வந்திருக்காவிட்டால், எம்பெருமானாரைப் பார்த்திருக்கப் போவதில்லை. பார்த்திருக்காவிட்டால், இந்த கைங்கர்யப் பிராப்தி கிடைத்திருக்கப் போவதில்லை. என்னுடைய இந்த

புது ஆனந்தத்துக்கும் நீதான் காரணம்" என்றான் தனுர்தாஸன்.

அன்றுமுதல் இருவருமே மடத்துக் கைங்கர்யத்தில் ஈடுபட்டார்கள். உஷத் காலத்தில் இருவரும் எழுந்திருந்து மடத்துக்கு வந்து தனுர்தாஸன் குடம் குடமாக நீர் இழுத்துக் கொட்ட, பொன்னாச்சி விளக்குமாறால் விளக்கி சுருணையால் துடைத்து விதவிதமாகக் கோலங்களைப் போட்டு வந்தாள். பிறகு இருவரும் காவிரி சென்று நீராடி மடத்துக்கு வந்த உடையவர் ஆணைக்கு ஏங்கி நிற்பார்கள்.

அவர்கள் வந்த பின்பு மடம் பரமசுத்தமானதையும் சித்திரக்கோலங்கள் அதை அழகுபடுத்தியதையும் உடையவர் கவனித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் இருவரையும் அழைத்து, "நாலாயிரம் சந்தை சொல்லிக் கொள்ளுங்கள்" என்று நியமித்துச் சந்தை சொல்ல ஒரு ஸ்வாமியையும் நியமித்தார். சந்தை சொன்ன ஸ்வாமி பிரமித்தார். ஏகாக்ர சித்தனான தனுர்தாஸன் நாலாயிரத்தை வெகு சீக்கிரத்தில் சித்தத்தில் ஏற்றுக் கொண்டான். கிரந்த சூக்ஷ்மங்களை பொன்னாச்சி வெகு விரைவில் கற்றாள். வினய சம்பன்னர்களான இருவரும் தங்களுக்கு வித்தை தெரிந்ததாக வெளியில் காட்டிக் கொள்ளவே இல்லை.

ஆனால், அதுவும் ஒரு நாள் வெளிவரவே செய்தது. மடத்தின் வெளித்திண்ணையில் உட்கார்ந்திருந்த வில்லிதாஸன் ஓலையில் எழுத்தாணி கொண்டு எதையோ எழுதிக்கொண்டிருந்தான்.

அவன் காலடியில் உட்கார்ந்திருந்த பொன்னாச்சி, அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் ஓலையை எழுதி முடித்து, "பொன்னாச்சி! உனக்கு சந்தம் தெரியுமல்லவா?" என்று வினவினான்.

"உங்களிடம் கற்றதுதான்" என்றாள் பொன்னாச்சி.

"இது உங்களுக்கு சரியாயிருக்கிறதா பார்" என்று அவளிடம் ஓலையைக் கொடுத்தான் வில்லிதாஸன்.

ஓலையைப் படித்தாள் பொன்னாச்சி. கண்களில் ஒற்றிக்கொண்டாள் அதை. பிறகு இன்னொரு முறை படித்தாள். கண்களில் நீர் சுரந்து திரையிட்டதால் எழுத்துகள் தெரியவில்லை. "உங்களை அடைய நான் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும்!" என்றாள் நா தழுதழுக்க.

"அது என்ன வில்லிதாஸா?" என்ற கணீரென்ற ஒரு குரல் அவர்கள் இருவரையும் துள்ளி எழுந்திருக்கச் செய்ததும், "ஒன்றுமில்லை" என்று மென்று விழுங்கினான் வில்லிதாஸன். அவனெதிரே எம்பெருமானார் நின்றிருந்தார், கருணை சொட்டும் கண்களுடன்.

"அதை இப்படிக் கொடு பொன்னாச்சி" என்று கையை நீட்டினார் உடையவர்.

பொன்னாச்சி ஒரு விநாடி விழித்தாள். பிறகு திடீரென்று உடையவரிடம் ஓலையைக் கொடுத்து விட்டுத் திருவடிகளில் விழுந்தாள். தனுர்தாஸனும் விழுந்தான்.

ஓலையில் கண்களை ஓட்டிய எதிராஜர், புன்முறுவல் கொண்டார். பக்கத்தில் நின்ற ஆண்டானைப் பார்த்து, "ஆண்டான்! இதைப் பார்" என்று ஓலையைக் கொடுத்தார்.

ஓலையிலிருந்த வரிகளை ஆண்டான் இரைந்தே படித்தார். சுவடியில் காணப்பட்ட வரிகள் இவை:

"நன்றும் திருவுடையோம் நானிலத்தி லெவ்வுயிர்க்கும்
ஒன்றும் குறையில்லை ஓதினோம் — குன்ற
மெடுத்தா னடிசேர் இராமா நுசன்றாள்
பிடித்தார் பிடித்தாரைப் பெற்று."

ஆண்டான் திருவாயினால் படித்த இவ்வரிகளைக் கேட்ட உடையவரின் முகத்தில் சற்றே சிந்தனை படர்ந்தது. ஆண்டான் முகத்தில் வியப்பு தாண்டவமாடியது. "வில்லி, நீ எழுதியதா இது!" என்று, வியப்பு குரலிலும் ஒலிக்கக் கேட்டார் ஆண்டான்.

"இதில் நான் என்பது எதுவுமில்லை. ஆசாரியன் திருவடி சம்பந்தம் கிளறிய சிந்தையிலிருந்து உதிர்ந்தவை" என்றான் வில்லி தலை குனிந்த வண்ணம்.

எம்பெருமானார் மடத்தைவிட்டு வெளியே நடந்தார் கோவிலுக்கு. ஆண்டான் தொடர்ந்தார் கையில் ஓலையை ஏந்திய வண்ணம். வில்லிதாஸன் தம்பதிகள் பின் தொடர்ந்தனர். வில்லிதாஸன் எழுதிய தனியன் வைஷ்ணவ சமுதாயத்தை ஒரு கலக்குக் கலக்கியது. மறுநாள் பெரும் அதிர்ச்சி வைணவ அந்தணர்களுக்குக் காத்திருந்தது. மற

நாள் ஆண்டான் கையைப் பிடித்துக் கொண்டு காவிரிக்குச் சென்ற உடையவர் தீர்த்தமாடி முடிந்ததும், கரையில் அவரது ஆணைப்படி நின்றிருந்த வில்லியை நோக்கி, "வில்லி! இப்படி வா!" என்றார். வில்லிதாஸன் அருகில் சென்றதும் அவன் தோளைப் பற்றிக்கொண்டு கரை ஏறி, "மடத்துக்குப் போ" என்று ஆக்ஞாபித்தார். இந்த விசித்திரத்தைக் கண்டு ஆண்டான் வாயைப் பிளந்து கொண்டு நின்றார்.

21. உடையவரின் பிடிவாதம்

வில்லிதாஸனின் வலிய தோள்களை நீராட்டத் துக்குப் பின்பு பற்றித் தம்மை உடையவர் அனாசாரப் படுத்திக் கொண்ட நிகழ்ச்சியாக ஆண்டான் நினைத்தார். நீராட்டம் முடிந்ததும் தாம் கரையின் அருகாமையில் இல்லாத காரணத்தால், தள்ளாமை யின் காரணமாக எம்பெருமானார் வில்லிதாஸனைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று முடிவு கட்டினார். மடத்துக்குச் சென்றதும் உடையவர் அனாசாரத்தைக் கண்டு வியப்படைந்த மற்ற வைதிகர்களுக்கும் ஆண்டானே தமது சமாதானத் தைச் சொல்லி "இனி இது ஏற்படாது" என்று உறுதி கூறினார்.

இந்த உறுதிகூட மற்றவர்களுக்குச் சமாதானத்தை அளிக்கவில்லை. அப்படி உடையவர் அறியாமல் செய்திருந்தால் மடத்துக்கு வந்ததும் மந்திரஸ்நானமாவது செய்திருக்கலாமே என்று பேசிக் கொண்டார்கள். "அதுவும் வேண்டாம். 'ஓம் நமோ நாராயணாய' என்று சொல்லித் தலையில் புரோக்ஷித்துக் கொண்டிருக்கலாமே" என்று ஓரிருவர் முணு முணுத்தனர். அந்த முணுமுணுப்பு அன்றுடன் நிற்கவில்லை. மறுநாள் அதிகமாயிற்று. அதற்கடுத்த நாள் இதைப் பற்றி மடத்துப் பிராமணர்கள் பகிரங்க மாகவே பேசத் தொடங்கினார்கள். உடையவர் பிரதி தினம் பிள்ளை உறங்கா வில்லிதாஸனின்

தோள்களைப் பற்றிக் கொண்டே மடத்துக்கு வந்து கொண்டிருந்தார். இதனால் ஆண்டானும் மனம் நொந்தாலும் அது சரியாகத்தானிருக்கும் என்ற எண்ணத்தில் பேசாமலிருந்து விட்டார்.

இப்படிப் பத்து நாட்கள் உடையவரின் 'அனாசாரம்' தொடரவே ஆண்டானை வைதிகர்கள் நேரிடையாகவே கேட்கத் துவங்கினார்கள். "ஸ்வாமீ! தேவரீர்! முதல் நாள் சாதித்தபடி உடையவர் தெரியாமல் ஏதும் செய்வதாகத் தெரியவில்லையே" என்றார் ஒரு ஸ்வாமி.

"வில்லிதாஸன் தோள் வலிமையுள்ளதாகையால் எம்பெருமானாருக்கு அது உகப்பாக இருக்கிறதோ என்னவோ" என்றார் இன்னொரு ஸ்வாமி.

"இருந்தாலும் இந்த அனாசாரத்தை நாங்கள் சகிக்க முடியாது" என்றார் மற்றொரு ஸ்வாமி.

"வில்லிதாஸனைத் தொட்ட தீட்டுடனேயே எம்பெருமானார் அநுஷ்டானங்களைச் செய்கிறார். காலட்சேபமும் அத்துடனே நடக்கிறது" என்றார் இன்னுமொருவர்.

இவற்றைக் கேட்ட ஆண்டான் மனம் நொந்தார். "அடியேனை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?" என்று விசாரித்தார்.

"ஸ்வாமியிடம் அடியோங்கள் அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்ல வேணும்" என்று ஸ்வாமிகளில் வயோதிகராயிருந்த ஒருவர் தெரிவித்தார்.

ஆண்டான் இதற்கு ஒத்துக் கொண்டார். அன்றிரவு எம்பெருமானாருடன் ஏகாந்தத்தில் இருந்தபோது இது விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். "மடத்தில் பேச்சு பலவிதமாக அடிபடுகிறது" என்று ஆண்டான் துவங்கினார்.

"என்ன பேச்சு அடிபடுகிறது?" எம்பெருமானார் சயனித்த வண்ணம் வினவினார்.

"நீராட்டத்துக்குப் பிறகு வில்லிதாஸனின் தோளைப் பிடித்து நடந்து வருவது பிராமணர்களுக்குப் பிடிக்கவில்லை..."

"யாரது பிராமணர்கள்? நம் மடத்தவர்களா?"

"ஆம்."

"ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியைச் சேர்ந்தவர்களா?" எம்பெருமானார் கேள்வியில் வியப்பு தொனித்தது.

"ஆமாம்."

"ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியில் இதற்கு இடமேது? எம்பெருமான் ஸ்ரீரங்கநாதனே தமக்கருகில் திருப்பாணாழ்வாரை நிறுத்திக் கொண்டிருக்கிறானே!"

"அவன் எம்பெருமான்..."

"அடியேனையும் அப்படித்தானே அழைக்கிறீர்கள்?" என்று கேட்ட எம்பெருமானார் உதடுகளில் புன்னகை கொண்டார். ஸ்வாமிகளின் மனக்குறை

யைக் கூடிய விரைவில் தீர்ப்போம் என்றும் கூறினார்.

அந்த உரையாடல் அன்றுடன் முடிந்தது. எம்பெருமானார் அளித்த உறுதியால் முணுமுணுப்புகள் நின்றன. ஆனால் உடையவர் வில்லிதாஸனைப் பிடித்துக் கொண்டு வருவதை நிறுத்தவில்லை. நாளுக்கு நாள் அவர் பிடிவாதம் அதிகமாவதைக் கண்ட பிராமணர்களின் கொதிப்பு அதிகமாயிற்று. ஆகவே ஒரு நாள் நீராடித் தங்கள் வேஷ்டிகளை மடத்து வாசலில் கட்டிய வைதிகர்கள் உடையவர் தூரத்தில் வில்லிதாஸன் தோளில் கையை ஊன்றிக் கொண்டு வருவதைப் பார்த்ததும் மடத்துக்குள் சென்றுவிட்டனர்.

அவர்கள் நடையின் வேகத்தைத் தூரத்திலிருந்து பார்த்த உடையவர், மடத்துப் படிகளில் ஏறியதும் வில்லிதாஸன் தோளை விட்டார். "வில்லி" என்று அன்பாக அழைத்தார்.

"ஸ்வாமீ!" வில்லிதாஸன் வாயைப் பொத்தி நின்றான்.

"இந்த வேஷ்டிகள் மடத்து வழியை மறைக்கின்றன."

"ஆம், ஸ்வாமி!"

"ஒவ்வொரு வேஷ்டியையும் ஒரு சாண் கிழித்து விட்டால் வழி மறையாது."

"ஆம், ஸ்வாமி."

"அப்படியே செய்துவிடு'' என்று ஆக்ஞாபித்த எம்பெருமானார் உள்ளே சென்றுவிட்டார்.

ஆசார்யர் வார்த்தைக்கு மறு வார்த்தை ஒன்றும் பேசியறியாத வில்லிதாஸன், வேஷ்டியைக் கிழிக்கும் கைங்கர்யத்தில் மும்முரமாக இறங்கினான்.

22. பணக் கஷ்டம்

மல்யுத்தத்தில் பலருடைய சதைகளைக் கிழித்திருக்கும் வில்லிதாஸனுக்கு அந்தணர்களுடைய வேஷ்டிகளைக் கிழிப்பது ஒரு பொருட்டாயில்லையென்றாலும், அவர்கள் வைஷ்ணவர்கள், மடத்தைச் சேர்ந்தவர்கள் என்ற நினைப்பால், மிகுந்த பக்தியுடனும் எச்சரிக்கையுடனும் ஒவ்வொரு வேஷ்டியிலும் ஒவ்வொரு சாணுக்குமேல் போகாமல் தனது கையால் சாண் போட்டு அளவெடுத்துக் கிழித்தான். கிழித்த பின்பு அதே வேஷ்டிகளைத் திரும்பவும் பழையபடி தாழ்வாரக் கூரையில் உலர்த்தவும் செய்தான். அத்தனையையும் கிழித்த பின்பு கிழித்த பகுதிகளை எண்ணிப் பார்த்தான். மொத்தம் எட்டுத் துணிகளைக் கிழித்திருந்தது புரிந்ததால் பரவசத்துடன் கிழிக்கப்பட்ட பகுதிகளை மடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான். "உடையவரின் கருணைதான் என்ன! எனக்கு அஷ்டாக்ஷரத்தை எத்தனை விதங்களில் காட்டிக் கொடுக்கிறார்!" என்று வியந்துகொண்டே மடத்துக்குள் சென்று உடையவரை தண்டனிட்டுத் தாளும் தடக்கையும் கூப்பி, "ஸ்வாமி! உத்தரவை நிறைவேற்றி விட்டேன்" என்று கையிலிருந்த கிழிசல் துண்டுகளைக் காட்டினான்.

உடையவர் அவனைக் கேள்வி கேட்கும் பாவனையில் ஏறெடுத்து நோக்கினார். "இவற்றை எங்காவது எறிந்துவிடு" என்றார்.

சிறிது தயங்கினான் வில்லிதாஸன். "இவற்றை அடியேன் வைத்துக் கொள்ளலாமா?" என்று பயந்து வினவினான்.

"இவற்றில் என்ன விசேஷம்?" என்று உடையவர் கேட்டார்.

"பாகவதப் பிரசாதம். பாகவதர் உடுத்திக் களைந்த பீதகவாடைப் பகுதிகள். தவிர, எட்டுத் துண்டுகள் இருக்கின்றன. அஷ்டாக்ஷரத்தை நினைவூட்டுகின்றன" என்று வில்லிதாஸன் கண்களை நிலத்தில் தாழ்த்திக் கூறினான்.

உடையவர் கண்களில் அன்பு பெருக்கெடுத்து ஓடியது. இதயத்தில் 'இந்தப் பக்குவம் மடத்திலிருக்கும் அந்தணர்களுக்கு இல்லையே' என்ற ஏக்கம் ஏற்பட்டது. "சரி, உன்னிஷ்டப்படியே செய்" என்றார்.

வில்லிதாஸன் அந்தத் துண்டுகளை உள்ளேயிருந்த தனது மடிசஞ்சியில் பத்திரப்படுத்தினான். பிறகு கூடத்தைத் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த பொன்னாச்சியுடன் சேர்ந்து உடையவர் காலட்சேபத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கலானான். ஏற்பாடுகள் முடிந்ததும் திருவாராதனத்துக்கு புஷ்பமெடுக்கப் புறப்பட்டான். அந்தச் சமயத்தில் உள்ளறையிலிருந்து வெளியே

வந்த ஆண்டான், "வில்லிதாஸா! நீயும் பொன்னாச்சியுமாகக் காவேரிக்குப் போய் அந்தத் துணிகளைத் துவைத்துக் கொண்டு வாருங்கள்" என்று ஒரு மூட்டைத் துணிகளை அவனிடம் கொடுத்தார். மறுவார்த்தை பேசாமல் வில்லிதாஸன் அன்று இரண்டாம் முறையாகப் புறப்பட்டான் காவிரிக்கு. பொன்னாச்சியும் உடன் சென்றாள்.

அவர்கள் சென்ற ஒரு நாழிகைக் கல்லாம் மடத்து வாசலில் பெரும் கூச்சல் கேட்டது. வாய்க்கு வராத வார்த்தைகள் நாக்கில் நரம்பில்லாமல் வீசப் பட்டன. இந்தக் கூச்சலுக்குக் காரணம் தெரிந்திருந் தாலும் தெரியாததுபோல் உடையவர் ஆண்டானை அழைத்து "ஆண்டான்! வெளியே யார் கூச்சல் போடுகிறார்கள்? பார்த்து வா" என்று ஆக்ஞா பித்தார்.

'உண்மையில் இவர் எம்பெருமான்தான். பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டப் பார்க்கிறார்' என்று தம்முள் சொல்லிக் கொண்ட ஆண்டான் மடத்து வாயிலுக்கு வந்து, அங்கு கண்டபடி கூச்சலிட்டுக் கொண்டிருந்த அந்தணர்களை நோக்கி, "ஏன் இந்தக் கூச்சல்?" என்று வினவினார்.

இதைக் கேட்டதும் அந்தணர் கூச்சல் அதிகப் பட்டது. "யாரோ ஒரு தூர்த்தன் வேஷ்டிகளைக் கிழித்துவிட்டான்" என்றார் ஒருவர். மற்றவர்கள் வசை பாடலைத் தொடர்ந்தார்கள். "சரி, உள்ளே

வந்து உடையவரிடம் சொல்லுங்கள். மடத்து வாசலில் கூச்சல் வேண்டாம்" என்றார் ஆண்டான்.

கூடத்தில் உபன்யாசத்துக்குத் தயாராக உட்கார்ந்திருந்த உடையவரை தெண்டனிட்ட அந்தணர்கள் தங்கள் குறையைத் தெரிவித்தார்கள். உடையவர் அதை விசாரிப்பதாகக் கூறிவிட்டு உபன்யாசத்தை ஆரம்பித்தார். பிராம்மண கோஷ்டி நடுவே உட்கார்ந்தது. இரண்டு ஏகாங்கிகள் எம்பெருமானார்க்கு இரு புறத்திலும் நின்று திருவால வட்ட கைங்கர்யம் செய்தார்கள். வெளியிலிருந்து வந்த பாகவத கோஷ்டி கூடத்தைச் சுற்றிக் கொண்டது.

அன்று திருவாய்மொழி முதல் பத்தில் இரண்டாவது பகுதியை விளக்க முற்பட்ட எம்பெருமானார், "வீடுமின் முற்றவும்" என்ற பாட்டை எடுத்துக் கொண்டு வியாக்கியானம் செய்தார். "வீடுமின்" என்று ஆழ்வார் த்யாகத்துக்கு பிரதான்யமளித்திருப்பதை எடுத்துக் காட்டினார். சகலத்திலும் பாச பந்தங்களை அறுத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார். 'பரித்யக்தாமயாலங்கா: த்யக்தவா புத்ராம்ச தாராம்ச' என்று விபீஷணாழ்வான் 'விடப்பட்டது என்னால் இலங்கை. விடப்பட்டார்கள் புத்ரர்களும் பார்யை யும்' என்று 'விடப்பட்ட'தை முதலில் எடுத்துச் சொன்னதை விளக்கிய எம்பெருமானார், "சிறிய விஷயங்களிலாவது தியாக புத்தி வேண்டும். அப்பொழுதுதான் எம்பெருமான் கடாட்சம் கிட்டும்" என்று சாதித்தார்.

எம்பெருமானுடைய வாக்கு வன்மையும், கணீரென்ற கண்டசப்தமும் அப்படியே அங்கிருந்தவர்களை மெய்மறக்கச் செய்தது. உபன்யாசத்தின் சுவை தெய்வசான்னியத்தை அங்கேயே சிருஷ்டித்தது. "இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் பாசுரம் இந்த சதஸுக்கும் பொருந்தும் என்று ஆண்டான் நினைத்தார்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாளிரவு உடையவர் தமது சயன அறையில் சிந்தாக்கிராந்தராய் உட்கார்ந்திருந்தார். பக்கத்திலிருந்த பிராம்மண கைங்கர்யபரர்கள், "ஸ்வாமி ஏதோ கிலேசத்திலிருப்பதுபோல் காண்கிறது" என்றார்கள்.

"ஆம்." உடையவர் பதிலில் துன்பம் தெரிந்தது.

"எதற்கும் அடியோங்களிருக்கிறோமே, உத்தரவு எதுவானாலும் நிறைவேற்றுகிறோம்" என்றார் ஒருவர்.

"மடத்துச் செலவுக்கு அடியோடு பணமில்லை. பொக்கிஷம் காலியாகிவிட்டது" என்றார் எம்பெருமானார்.

"ஏதாவது பணம் திரட்டலாமா?" என்று இன்னொருவர் கேட்டார்.

"எப்பொழுது திரட்டுவது? எங்கு திரட்டுவது?" என்று கிலேசப்பட்ட எம்பெருமானார் திடீரென ஆண்டானை நோக்கி, "ஆண்டான்! பொன்னாச்சி

காலில் இருக்கிற இரண்டு சிலம்புகளைப் பார்த்திருக்கிறாயா?" என்று வினவினார்.

உடையவர் எண்ணம் போகும் திசையை உணர்ந்த ஆண்டான், "பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு சிலம்பும் லட்சம் பவுன் பெறும்" என்றார்.

"அந்த இரண்டையும் கொண்டு வந்து விட்டால்?" என்று கேட்டார் உடையவர்.

"அடுத்துச் சில ஆண்டுகளுக்கு மடத்துக்குப் பணக் கஷ்டம் கிடையாது" என்றார் ஆண்டான்.

"அதை யாராவது கவர்ந்து வர முடியுமா?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்டார் உடையவர்.

"முடியாமலென்ன? ஆனால் அவள் புருஷன் மல்லன் இருக்கிறானே அவன் எங்களைப் பிண்டமாக அடித்துப் போடுவானே" என்றார் ஒரு கைங்கர்யபரர்.

"அவனைப் பற்றிக் கவலை வேண்டாம். இங்கேயே நிறுத்திக் கொள்கிறேன்" என்ற உடையவர் பக்கத்திலிருந்த இரு பாகவதர்களையும் நோக்கினார்.

"அப்படியானால் கவலையில்லை" என்றார் ஒருவர்.

"இதற்கு அமாவாசை ராத்திரி சௌகர்யமென்று நினைக்கிறேன்" என்றார் உடையவர்.

"அன்றே காரியத்தை முடிக்கிறோம்" என்று இரு பாகவத சிரோமணிகளும் கூறினார்கள்.

உடையவர் முகத்தில் சாந்தி நிலவியது. "ததாஸ்து" என்று அனுக்கிரகம் செய்தார்.

மெள்ள மெள்ள அமாவாசை இரவும் வந்தது.

23. கண்ணீர்த் துளிகள்

அமாவாசையன்று இராக்கால கோஷ்டி முடிந்த பின்பு அழகிய மணவாளன் சந்நிதியிலிருந்து பாகவத கோஷ்டி சூழ மடத்துக்குத் திரும்பிய யதிராஜர் வயோதிகத்தால் ஏற்பட்ட சிரமத்தைச் சரிப்படுத்திக் கொள்ளக் கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டார். தன்னை தெண்டன் சமர்ப்பித்து விடை கொள்ள நின்ற பாகவதர்களில் பிள்ளையுறங்கா வில்லிதாஸனையும் அன்று கள்ளத் தொழில் செய்ய வேண்டிய இரு அந்தண சிரேஷ்டர்களையுந் தவிர மற்றவர்களுக்கெல்லாம் விடை கொடுத்து அனுப்பினார்.

வில்லிதாஸன் கைகட்டி வாய் புதைத்து நின்றான். "வில்லி! இன்று என்னமோ உடலெல்லாம் வலியாயிருக்கிறது. கால்களிலும் குடைச்சலாயிருக்கிறது. சிறிது நேரம் நீ கூட இரு" என்று கூறினார். பிறகு இரு அந்தணர்களையும் நோக்கி, "தெரியாமல் உங்களை நிறுத்தி விட்டேன், உங்களுக்கு வேறு வேலையிருக்கும், அதைக் கவனியுங்கள்" என்று சூசகமாகச் சொன்னார்.

ஸ்வாமியினுடைய சூசகச் சொற்களாலும் அத்தனை பாகவதர்களில் அவர் தங்களை மாத்திரம் தேர்ந்தெடுத்ததாலும் உள்ளூர உவகையுற்று இருவரும் ஸ்வாமியிடமிருந்து விடை கொண்டனர்

வில்லிதாஸன் கவலை முகத்தில் விரிய நின்றிருந்தான் சில விநாடிகள். பிறகு ஸ்வாமிக்கு எட்ட உட்கார்ந்து பாதங்களை வருடலானான். ஸ்வாமி திருமேனியில் ஏற்பட்ட வலி அவன் மனத்தில் பெருவலியை ஏற்படுத்தியிருந்ததால் அவன் கிலேசமும் யதிராஜர் திருவடி சம்பந்தம் என்பது தனக்கு மட்டும் நேரடியாகவே கிடைத்ததென்ற நினைப்பால் உவகையுடனும் கலந்த உணர்ச்சிகளுடன் மிக மெதுவாகத் திருவடிகளை வருடினான். ஸ்வாமியும் அவன் அன்பு சொட்டும் உள்ளத்தைத் தமது கடைக்கண் வீச்சினாலேயே கவனித்துப் புன்முறுவல் கொண்டு அந்த இடத்திலேயே படுத்துக் கொண்டார். நேரம் ஓடிற்று; வில்லிதாஸன் கண்ணும் கருத்துமாக சரணசேவை செய்து கொண்டிருந்தான்.

உடையவர் உள்ளத்தை உள்ளங்கை நெல்லிக் கனி போல் உணர்ந்திருந்த ஆண்டான் உள்ளிருந்து ஸ்வாமி முன்பு வந்து, "அடியேனுக்கு ஏதாவது ஆக்ஞை உண்டா?" என்று வினவினார்.

"ஏதுமில்லை, நீ போய்ப் படுத்துக்கொள்" என்று நியமித்தார் உடையவர். ஆண்டான் சென்றார். அவர் மடத்து அறைகளிலொன்றைத் திறக்கும் ஒலி வில்லிதாஸன் செவிகளில் விழுந்தது. அதே சமயத்தில் காவிரிக்கரையிலிருந்த ஒரு குடிசையின் கதவு எந்தவித அரவமுமின்றி வெகு லேசாகத் திறக்கப்பட்டது.

குடிசைக்குள்ளே கயிற்றுக்கட்டிலில் தாமரை விழிகளை மூடி ஒருக்களித்துப் படுத்திருந்தாள் பொன்னாச்சி. தனது குடிசைக் கதவு வழக்கத்துக்கு மாறாக மிக எச்சரிக்கையுடன் திறக்கப்பட்டு உள்ளே யாரோ நுழைவதைக் குடிசைக் கோடியில் தொங்கிய தூண்டா விளக்கின் மங்கலான ஒளியிலிருந்து ஓரக் கண்ணால் பார்த்தாள். வந்தவர்கள் மடத்து அந்தணர் என்று தெரிந்ததும் கண்களை மூடிக் கொண்டாள்.

உள்ளே நுழைந்த அந்தணர்கள் பொன்னாச்சியை உற்று நின்று கவனித்தனர் சில விநாடிகள். அவள் ஆழ்ந்த நித்திரையிலிருப்பதாக நினைத்து அவள் பாதங்களை அணுகினர். ஒரு அந்தணர் மெள்ள ஒரு பாதத்தின் சிலம்பை வெகு சாமர்த்தியமாகக் கழற்றினார். அடுத்த சிலம்பு அவள் ஒருக்களித்து, கால் மேல் கால் போட்டுப் படுத்திருந்ததால் கழற்ற முடியாத நிலையிலிருந்ததால் தமது சகோதரக் கள்ளரை நோக்கினார். அவர்கள் சங்கடத்தைப் புரிந்து கொண்ட பொன்னாச்சி மேலிருந்த காலைச் சிறிது நீக்கினாள், சிலம்பைக் கழற்ற வசதி செய்ய. அவள் விழித்துக் கொண்டு விட்டதாக நினைத்து மடத்து அந்தணரிருவரும் குடிசைக் கதவை நோக்கி நகர்ந்து வெளியே வந்தனர். பிறகு தாங்கள் பூர்வ ஜென்மத்தில் மான்களாக இருந்ததை நிரூபித்தனர். குடிசையில் அவர்கள் பிடித்த ஓட்டம் மடத்துக்கு அருகில் வந்த பின்புதான் நின்றது.

அவர்களை வாசலில் சந்தித்த ஆண்டான், "சத்தம் செய்ய வேண்டாம். இப்படி ஒளிந்திருங்கள். மல்லனை அனுப்பி விட்டு வருகிறேன்" என்று

கூறிவிட்டு உள்ளே சென்றார். "வில்லி! ஸ்வாமி நித்திரை மேற்கொண்டிருக்கிறார். நீ போகலாம்" என்றார்.

"ஸ்வாமி நியமனம் ஆகவில்லையே" என்றான் வில்லிதாஸன்.

அப்பொழுதுதான் விழித்துக் கொண்டது போல் கண்களைத் திறந்த உடையவர், "வில்லி! நீ இன்னும் இல்லம் செல்லவில்லை?" என்று வினவினார்.

"இல்லை." வில்லி மெல்லப் பேசினான்.

"ஏன்?"

"ஸ்வாமி விடை கொடுக்கவில்லை."

"நல்லபிள்ளை நீ; நான் அயர்ந்துவிட்டால் அதற்காக இங்கேயே இருப்பதா? நடுநிசி தாண்டி விட்டதே. போ, பொன்னாச்சி தனியாயிருப்பாள்."

"ஸ்வாமி! அவள் எப்படித் தனியாயிருக்க முடியும்?"

"வேறு யாராவது துணையிருக்கிறார்களா?"

"சகல சராசரங்களையும் பாதுகாக்கும் பகவான் இல்லையா?"

இதைக் கேட்ட உடையவர் அசந்து போனார். "ஆமாம் இருக்கிறார். இருப்பினும் நீ போய் வா. பொன்னாச்சி பெண் பிள்ளை. பயப்படுவாள்" என்று இல்லம் செல்லும்படி ஆக்ஞாபித்தார் எம்பெருமானார்.

மடத்துத் தாழ்வரையில் ஒளிந்திருந்த அந்தணரிருவரும் வில்லிதாஸன் தலை மறைந்ததும் உள்ளே தலைகாட்டினர்.

"போன காரியம் எப்படி?" என்று வினவினார் உடையவர்.

"பாதி ஜெயம்" என்றார் ஒரு அந்தணர்.

"ஒரு சிலம்பைத்தான் கழற்ற முடிந்தது. இன்னொன்றைக் கழற்றுவதற்குள் மல்லன் மனைவி விழித்துக் கொண்டாள்," என்று கூறிய அந்தணர், தாங்கள் திருடிய சிலம்பை ஸ்வாமியிடம் நீட்டினார்கள்.

அதைக் கையில் வாங்கிய உடையவர் சில விநாடிகள் அதைத் தமது திருக்கையினால் தடவினார். "இன்னும் ஆறு மாதத்திற்கு மடத்துச் செலவுக்குப் பஞ்சமில்லை," என்று சற்று இரைந்தே சொன்னார். பிறகு அந்தணர்களை நோக்கி, "உங்களால் மடம் பிழைத்தது" என்றார்.

"எல்லாம் ஸ்வாமி கிருபை" என்றார் ஒரு அந்தணர்.

உடையவர் உள்ளூர நகைத்துக் கொண்டார். 'திருட்டுக்கு ஸ்வாமி கிருபையாம். நல்லது நல்லது' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டார். "நீங்கள் போய் சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள்" என்று அந்தணர்களுக்குக் கூறினார். அந்தணர் ஸ்வாமியை வணங்கிச் சென்றனர்.

அவர்கள் சென்றதும் ஆண்டான் மடத்துக் கதவைச் சாத்திக்கொண்டு வந்தார். “ஆண்டான்! இதைப் பத்திரமாக வை” என்றார் உடையவர்.

ஆண்டான் ஏதும் பேசாமல் சிலம்பை வாங்கிக் கொண்டு சென்றார். உடையவர் இதழ்களில் புன் முறுவல் விரிந்தது. ஆனால், வில்லிதாஸன் குடிசை யில் புன்முறுவலுக்கு இடமில்லை. துன்பம் சூழ்ந் திருந்தது.

குடிசைக்குள் நுழைந்த வில்லிதாஸனை பொன்னாச்சி வழக்கம்போல் புன்முறுவலுடன் வரவேற்கவில்லை. துன்பம் தோய்ந்த முகத்துடன் கட்டிலில் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அவள் துயரத்துக்குக் காரணம் தெரியாத வில்லி அவளை அணுகி அவள் தோள் மீது கையை வைத் தான். இன்னொரு கையால் அவள் முகத்தை நிமிர்த்தினான். கமல முகத்தில் முளைத்திருந்த இரு நீலோற்பலங்களில் துயரம் படர்ந்திருந்தது.

வில்லி கேட்டான், “என்ன ஹேமா? என்ன நடந்தது?” என்று.

“மடத்திலிருந்து இருஅந்தணர்கள்வந்தார்கள்.”

“உம்.”

“என் சிலம்புகளை எடுக்க முயன்றார்கள்.”

“உம்.”

“ஒருக்களித்துப் படுத்திருந்ததால் ஒருசிலம்பைத் தான் எடுக்க முடிந்தது அவர்களால். இன்னொரு சிலம்பையும் கழற்றட்டுமென்று காலைச் சிறிது நகர்த்தினேன்.”

“சொல் மேலே.” வில்லிதாஸன் குரலில் கடுமை தட்டியிருந்தது.

“நான் விழித்துக் கொண்டதாக நினைத்து ஓடி விட்டார்கள்...” இந்தச் சமயத்தில் அவள் பெரு மூச்சு விட்டாள் சோகத்தால்.

வில்லிதாஸன் அவள் தோளிலும் முகவாய்க் கட்டையிலும் வைத்திருந்த தனது இரு கைகளையும் விலக்கி, சற்றுத் தள்ளி நின்று கொண்டான். கனல் கக்கும் கண்களால் பொன்னாச்சியை நோக்கி, “அடி பாவி! என்ன அபசாரம் செய்து விட்டாய்! பாகவதர் கள் வந்தார்களென்று தெரிந்தவுடன் நீ எழுந்திருந்து அவர்களை வணங்கி, வேண்டுவதென்ன என்று கேட்டுச் சிலம்புகளை நீயாகக் கழற்றிக் கொடுத் திருக்க வேண்டியிருக்க அவர்களைத் திருடர்களாக் கினாய். வந்த காரியம் முடியாமல் அவர்கள் ஓட வகை செய்தாய். இதைவிட பாகவத அபசாரம் என்ன இருக்கிறது? இனி என் முகத்தில் நீ விழிக்காதே” என்று சீறி। வில்லிதாஸன் தரையில் மேல் துண்டை விரித்துப் படுத்தான்.

“ஸ்வாமி! ஆகாரம் செய்யவில்லையே” என்று ஏக்கமுடன் வேண்டினாள் பொன்னாச்சி.

“உன் கையால் சாப்பிடுவதும் பாவம். உன்னுடன் பேசுவதும் பாவம். உன்னைப்

பார்ப்பதும் பாவம்" என்று மீண்டும் சீறிய வில்லிதாஸன் கண்களை மூடினான்.

காவிரிக்கரையில் அவனைக் கவர்ந்த கண்கள் அன்று கவரச் சக்தியற்றனவாயின, துக்கத்தால். அவன் கூறிய சுடுசொற்களால் கண்கள் கலங்கின, அவற்றிலிருந்து உஷ்ணமான நீர்த்துளிகள் அவள் அழகிய கபோலத்தில் வழிந்து ஓடின.

24. கவர்ந்த திருவடிகள்

பொன்னரங்கம்வாழ் அந்தணரிருவர் பொன்னாச்சியின் சிலம்பு ஒன்றைக் கவர்ந்து வந்த நாளிலிருந்து ஐந்தாவது நாள் காலையில் உடையவர் மடத்துக் கூடத்தில் பாகவத சபை நிறைந்து கூடியிருந்தது. என்ன காரணத்தாலோ அன்று வையகம் வாழ்விக்க வந்த ராமானுஜன் தனது விசால முகத்தில் தனியொளியொன்று பரந்து சுடர்விட, கண்களில் திருப்தி நிலவியதால் அவற்றில் மகிழ்ச்சி தாண்டவமாட கிருஷ்ணாஜினத்தில் எழுந்தருளியிருந்தார். அன்று ஏதோ பெரிய அருளிச் செயல் எம்பெருமானாருடைய திருவாய்களிலிருந்து வெளிப்படப் போகிறது என்பதைப் புரிந்துகொண்ட பாகவத கோஷ்டி நிசப்தமாக அமர்ந்திருந்தது. அவர்கள் எதிர்பார்த்ததில் தவறு இல்லை. எம்பெருமானார் பகவத் குணங்களில் பிரதானமான ஸௌசீல்யம் என்பதைப் பற்றி உபன்யசிக்க ஆரம்பித்தார்.

"சீலம் அல்லது ஒழுக்கம் ஒன்றுதான் யாரையும் மேம்படுத்துகிறது, ஞானம் அதற்கு அடுத்தபடி. வயது அதற்கும் அடுத்தபடி இதைத் தெளிவு படுத்தத்தான் சக்கரவர்த்தித் திருமகன் யார் யாரை வணங்குவான் என்று வால்மீகி பகவான் ஸ்ரீ ராமாயண மகாக்கிரந்தத்தில் கூறுகிறார். சீல விருத்தை : ஞான விருத்தை : வசீயா விருத்தைச்

ஸஜ்ஜனை என்பது மகரிஷி வாக்கியம். ஸ்ரீராமன் ஒழுக்கத்தில் சிறந்தவர்களையும், ஞானத்தில் சிறந்தவர்களையும், வயதில் அதிகமானவர்களையும் முறைப்படி வணங்குவான் என்பது பொருள். மனிதனுக்கு வயதைவிட, அறிவைவிட ஒழுக்கம் பிரதானம் என்று சுட்டிக் காட்டவே பகவத் குணங்களை மேற்படி கிரமத்தில் வைத்தார். சீலம் என்பது சரீர அழகைக் குறிக்காது. ஆத்ம சுத்தியைக் குறிக்கும். ஆத்ம விலக்ஷணத்தைப் பார்த்துதான் நாம் யாரையும் வைஷ்ணவ ஸதஸில் கொண்டாடுகிறோம். ஜாதி மத பாகுபாடுகள் வைஷ்ணவத்தில் கிடையாது. இருந்தால் பெரும்பாலான அந்தணரல்லாத ஆழ்வார்களை நாம் வணங்குவோமா? ராமன், கிருஷ்ணன்— இரு அவதாரங்களும் பிராம்மண அவதாரங்களல்லவே. அவர்களை ஏன் பிரதானமாக நினைக்கிறோம்? ஆழ்ந்து யோசித்தால் யாரும் ஜாதியால் உயர்வதில்லை. அப்படி உயர்வதானால் அழகிய மணவாளனுக்குப் பக்கத்தில் திருப்பாணாழ்வாருக்கு என்ன காரியம்? இப்படி ஏற்பட்ட உயர்ந்த வைஷ்ணவ பரம்பரையில் ஸௌசீல்யமில்லாதவர்களுக்கு அதாவது சீலகுணமில்லாதவர்களுக்கு இடமில்லை'' என்று பேசிக் கொண்டு போன ஸ்ரீ ராமானுஜர் சிறிது நிதானித்தார்.

பிறகு சரேலெனத் திரும்பி எட்ட உட்கார்ந்திருந்த பிள்ளையுறங்கா வில்லிதாஸனையும் பொன்னாச்சியையும் நோக்கினார். "வில்லிதாஸா!" என்று அழைக்கவும் செய்தார்.

சதஸிலிருந்த அந்தணர்களுக்குக் கோபம் வந்தது. 'இப்பொழுதும் வில்லிதாஸன்தானா? பிரதி தினம் நீராட்டத்துக்குப் பிறகு ஸ்வாமிகள் செய்யும் அனாசாரம் போதாதா?' என்று நினைத்தார்கள்.

அவர்கள் உட்கேள்வி எம்பெருமானாருக்குப் புரிந்தேயிருந்தும் அதை வெளிக்குக் காட்டாமல், "வில்லி!" என்று இரண்டாம் முறை அழைத்தார்.

வில்லிதாஸன் மெள்ள எழுந்து நின்று தூணில் சாய்ந்து கொண்டு நின்றான். "ஸ்வாமி!" என்று தீனமான குரலில் பதிலும் சொன்னான்.

"உன் முகத்தில் சோர்வு காணப்படுகிறதே வில்லி!" என்று எம்பெருமானார் கேட்டார்.

வில்லி பதில் சொல்லவில்லை. பொன்னாச்சி பதில் சொன்னாள்: "ஸ்வாமி! அவர் சாப்பிட்டு நான்கு நாட்கள் ஆகின்றன" என்று.

உடையவர் கண்கள் வியப்பால் மலர்ந்தன. "ஏன் பொன்னாச்சி? அவன் உடல்நிலை சரியாயில்லையா?" என்று வினவினார்.

"உடல் நிலைக்கு ஏதுமில்லை. மனநிலை சரியாயில்லை" என்று பொன்னாச்சி பதில் சொன்னாள்.

"மனநிலைக்கு என்ன?" உடையவர் கேள்வியில் கருணை பொங்கி வழிந்தது.

"இந்தப் பாவிதான் காரணம் ஸ்வாமி. நான் செய்த பாகவத அபசாரத்தைச் சகிக்க அவரால்

முடியவில்லை'' என்று பொன்னாச்சியின் குரல் தழுதழுத்தது. பொன்னாச்சி விக்கிய வண்ணம் மேலே சொன்னாள்: ''அமாவாசை இரவில் எங்கள் குடிசையில் இந்த மடத்தைச் சேர்ந்த இரு அந்தணர் நுழைந்து நான் தூங்குவதாக நினைத்து என் சிலம்பைக் கழற்றினார்கள். கால்மேல் காலிருந்ததால் ஒரு சிலம்பைத்தான் அவர்களால் கழற்ற முடிந்தது. இன்னொரு சிலம்பையும் கழற்றிக் கொள்ளட்டுமென்று நான் காலைச் சிறிது அகற்றினேன். நான் விழித்துக் கொண்டு விட்டதாக நினைத்துப் பாகவதர்கள் பறந்து விட்டார்கள். பிறகு இவர் வந்தார்...''

இந்த இடத்தில் அதிகமாகத் தேம்பினாள் பொன்னாச்சி. ''மேலே சொல்'' என்று எழுந்தது எம்பெருமானாரின் ஆக்ஞைக் குரல்.

''இவர் வந்ததும் விஷயத்தைச் சொன்னேன். பாகவதர்கள் வந்தால் நீ உறங்குவதாக நடிப்பானேன்? எழுந்திருந்து அவர்களை வணங்கி, என்ன வேண்டும் என்று கேட்டு, வேண்டியதைக் கொடுப்பதல்லவா உன் கடமை. நீ செய்தது பெரும் பாகவத அபசாரம். உன்னால் பாகவதர்கள் வந்த காரியம் முடியவில்லை. அவர்கள் அச்சமுற்று ஓடும்படி செய்தாய். நீ பதிதை, என்னுடன் பேசாதே என்றார். அன்று முதல் அவர் என்னுடன் பேசவும் இல்லை, சாப்பிடவும் இல்லை...'' என்றாள் பொன்னாச்சி. அவள் கண்களிலிருந்து நீர் பொல பொலவென்று கொட்டியது.

உடையவர் சபையை நோக்கினார். யாரும் மூச்சு விடவில்லை. அப்பொழுது மெள்ள பேசத் தொடங்கிய எம்பெருமானார், ''பாகவதர்களே! இப்பொழுது புரிகிறதா வில்லியின் பாகவத நிஷ்டை. திருட வந்த பாகவதர்களை ஏன் வணங்கவில்லை என்று மகா பதிவிருதையான பொன்னாச்சியிடம் வெகுண்டு உபவாசமிருந்திருக்கிறான். 'எம்மடியார் அது செய்தார். செய்தால் நன்றே செய்தார்' என்ற குலசேகரர் காட்டிய கிரமத்தை இன்று நமக்கு அநுஷ்டான பூர்வமாகக் காட்டியிருக்கிறான். ஆனால், பிராம்மணோத்தமர்களான நீங்கள் என்ன செய்தீர்கள்? ஒரு சாண் வேஷ்டி போனதற்கு வாயில் வராத வார்த்தைகளைப் பேசினீர்கள். ஆனால், லட்சம் பவுனுக்கு மேல் பெறக்கூடிய சிலம்பை இழந்தவன் பாகவத கைங்கர்யத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசுகிறான், பட்டினி கிடக்கிறான். இப்பொழுது புரிந்து கொள்ளுங்கள், நான் நீராடியதும் அவன் தோளை ஏன் பிடித்துக் கொள்கிறேன் என்பதை. நான் சரீரத்தைக் கவனிப்பதில்லை. அந்தர்யாமியின் சரீரமான ஆத்மாவைக் கவனிக்கிறேன். அதனால்தான் வில்லிதாஸன் தோள்களைப் பற்றி காவிரியின் படிகளில் ஏறுகிறேன்'' என்று நிதானமாகவும் பசுமரத்தாணி போல் விஷயம் மனத்தில் பதியும்படியான நிலையிலும் விளக்கினார்.

ஸதஸில் மூச்சு பேச்சில்லை. அப்பொழுது ஆண்டானை நோக்கிய உடையவர், ''ஆண்டான், பொன்னாச்சியின் சிலம்பைக் கொடுத்துவிடு வில்லியிடம்'' என்று கட்டளையிட்டார்.

"ஸ்வாமி! மன்னிக்க வேண்டும். அவள் இன்னொரு சிலம்பையும் கொண்டு வந்திருக்கிறாள். பாகவத அபசாரத்திற்கு ஈடுசெய்ய" என்றான் வில்லி. அத்துடன் பொன்னாச்சி நீட்டிய சிலம்பையும் எடுத்து உடையவர் திருவடிகளில் சமர்ப்பித்தான்.

உடையவர் கண்களில் அருள் சுரந்தது. ஆண்டான் கொண்டுவந்த மற்றொரு சிலம்பையும் தமது திருவடிகளில் கிடந்த சிலம்பையும் கைகளில் எடுத்துக் கொண்ட உடையவர் ஸதஸை நோக்கி, "பாகவத சிரோமணிகளே! இந்தச் சிலம்புகளைப் பார்க்கையில் எனக்குக் கலியன் நினைவு வருகிறது. இம்மாதிரி சிலம்பைத்தான் ஆழ்வார் பல்லால் கடித்து இழுத்தார். அது பகவான் சிலம்பு. இவை நமக்கு பாகவத கோஷ்டியின் சிறப்பை உணர்த்துகின்றன" என்றார்.

இந்தச் சமயத்தில் "ஒரு விக்ஞாபனம்" என்றான் வில்லிதாஸன்.

"சொல் வில்லி" உடையவர் கருணையுடன் அனுமதி கொடுத்தார்.

இந்தச் சிலம்புகளை மடத்துக்கே வைத்துக் கொள்ளப் பிரார்த்திக்கிறேன். ஸ்வாமி அடியேனை ஆட்கொண்டதால் பரமாத்ம ஸ்வரூபத்தைக் காட்டிக் கொடுத்ததால் பதிதர்களான நாங்களிருவரும் ஏதோ சிறிது வைஷ்ணவ ஞானம் பெற்றோம். அடியேனை முதலில் காவிரித்தாய் ஆட்கொண்டாள். அவள் பிரவாகம் சுழித்து ஓடியதால் கண்கள்

போல் தெரிந்த அழகில் மனதைப் பறிகொடுத்தேன் ஆதியில். பிறகு அந்தக் கண்களிலிருந்து பொன்னாச்சியின் கண்களுக்கு அடியவன் மனம் திரும்பியது. அடுத்து ஸ்வாமியின் பரமகிருபையால் அழகிய மணவாளன் கருணை விழிகளுக்கு என் மனம் திரும்பியது. அதற்கும் மேலாக இப்பொழுது என்னைக் கவர்ந்து நிற்பது எம்பெருமான் கண்கள் கூட இல்லை, எம்பெருமானாரின் திருவடிகள். இனி அடியேனுக்கு ஏதும் தேவையில்லை. இந்தத் திருவடி சம்பந்தம் நிரந்தரமாக இருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்த வில்லிதாஸன் உடையவரிடம் சென்று அவரது திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்தான். பொன்னாச்சியும் அவன் பக்கத்தில் விழுந்து வணங்கினாள். இருவர் முகங்களும் அக்கம் பக்கத்தில் உடையவரின் இரு திருவடிகளையும் ஆனந்த பாஷ்பத்தால் நனைத்தன. அங்கிருந்தே கூவினான் வில்லிதாஸன், "எம்பெருமானார் திருவடிகளே சரணம்" என்று. கோஷ்டியும் ஒரு முகமாக சப்தித்தது. "எம்பெருமானார் திருவடிகளே சரணம்."

வில்லியை முன்பு கண்கள் கவர்ந்தன. இப்பொழுது ஜகதாசார்யனின் திருவடிகள் கவர்ந்தன.

உள்ளத்தின் சுத்தியில், கண், திருவடி- இரண்டுமே ஒன்றாவதை வில்லிதாஸன் உணர்ந்தான்.

□ ○ □